# இந்து சாதனம்

HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம் : விரோதி ஞு ஆவணி மீ 26 ஆம் உ (1889)

web : www.hinduorgan.com
e-mail : editor@hinduorgan.com

புத்தகம் : 121
இதழ் : 10

விகிர்தி வருடம் ஆனித் திங்கள் 1ஆம் நாள்
(15.06.2010)

பிரதி விலை
ரூபா. 50.00

## இணுவில் கந்தசாமி கோவில்

சிவா சரணன்

அடியவர்கள் தம் விருப்பங்களை – தேவைகளை – ஆண்டவனைக் கொண்டு நிறைவேற்றுவிப்பதைப்போல், சில சந்தர்ப்பங்களில், ஆண்டவனும் தன்னுடைய "விருப்பத்"தைத் தன்னுடைய அடியவர்களைக் கொண்டு நிறைவேற்றுவிக்கின்றான்.

ஆசார சீலராய், விரதமிருந்து, நேர்த்திவைத்து, வேறும் பல கிரியைகளையும் செய்வித்துத் தம்முடைய விருப்பங்களை – தேவைகளை – மீண்டும் மீண்டும் அவனிடம் சொல்லிப் பிரார்த்தித்தாற்றான் ஆண்டவனின் கருணையும் காரியசித்தியும் அடியார்களுக்குக் கிடைக்கும். ஆனால், ஆண்டவனோ தன் அடியவர்களின் கனவிலே தோன்றித் தன் விருப்பத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ வெளியிடுவதன்மூலம் தன் காரியத்தை மிக இலகுவிற் சாதித்து விடுகின்றான்!

யாழ்ப்பாண நகரிலிருந்து ஏழு கிலோமீற்றர் தொலைவில், யாழ். – காங்கேசன்துறை வீதியிலிருந்து கிளைவிட்டுச் செல்லும் இணுவில் – மானிப்பாய் வீதியில், சந்தியிலிருந்து இருநூறு மீற்றர் தொலைவில் அமைந்துள்ளன முருகன் கோவில், கருவாகி, உருவாகிக் காட்சியளிக்கும் பின்னணியிலே கனவுகளின் கதையும் கலந்திருக்கிறது.



இராஜகோபுரம் - வீதியுலாவரும் பஞ்சமூர்த்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்கள் நிரம்பி வழியும் சீர் இணுவைத் திருவூரிலுள்ளோரும் அயலூர்களைச் சேர்ந்தோரும் பெரிய கோவில் ஆகவும், ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தோர் இணுவில் கந்தசாமி கோவில் ஆகவும் போற்றிக் கொண்டாடுவது இந்த முருகன் கோவிலைத்தான். தன்னுடைய அடியவர் ஒருவரின் விடிகாலைக் கனவிலே வடிவேலன் தோன்றித் தனக்குக் குடிசை ஒன்று அமைத்துக்கொடுக்கும்படி கேட்டதுடன் இந்தக் கோயிலின், வரலாறு தொடங்குகின்றது.

வேலாயுதர் என்ற அந்த அடியவரின் பெயர்ப் பொருத்தமோ என்னவோ, நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் அந்த வெற்றிவேல் முருகனின் உருவத்தைத் தன் சிந்தையிற் பதித்துக் கொண்டே வெற்றிலை வேளாண்மையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் அவர். கந்தப் பெருமானை நினைத்துக் கைகூப்பாமல் அவருடைய மனைவியும் எந்த வேலையையும் செய்வதில்லை.

இந்த வேலாயுதர்தான் ஒரு நாள் கனவொன்றைக் கண்டார்.

"காஞ்சியம்பதியிலிருந்து நான் வந்திருக்கின்றேன். இங்கேயே தங்க விரும்புகின்றேன். வீடு ஒன்று வேண்டும். நீதான் அமைத்துக் கொடுக்க வேண்டும்" – கனவில் தோன்றிய ஒருவரின் கட்டளை – அன்புக் கட்டளை!

"வீடா? எங்கே அமைக்கவேண்டும்" வேலாயுதரின் விசாரணை.

"உன்னுடைய வெற்றிலைத் தோட்டத்திலேதான்"

"வெற்றிலைத் தோட்டத்தில் ஒரு வீடு கட்டுவதா?"

நொச்சித்தடி நாட்டப்பட்டிருக்கும் இடத்தில்..."

"ஆமாம், வெற்றிலைத் தோட்டத்திற்றான் ...

" என்னுடைய தோட்டத்தைப் பற்றி எனக்குத் தெரியாதா? அங்கே நொச்சித்தடியே இல்லையே..." என்று வேலாயுதர் சொல்வதற்குள், வந்தவர் மறைந்து விட்டார்; கனவும் கலைந்துவிட்டது.

விடிந்தவுடன் முதல் வேலையாகத் தன்னுடைய வெற்றிலைத் தோட்டத்துக்குச் சென்றார் அவர். "இதோ நான் இங்கே இருக்கிறேன்" என்று சொல்வதைப்போல், பச்சையாக இருந்த நொச்சித்தடி ஒன்று அந்தப் பக்திமானை வரவேற்றது.

கனவில் வந்தவர் கந்தப்பெருமான்தான் என்ற முடிவுக்கு வருவதற்கு வேலாயுதருக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. காஞ்சியம்பதியிலிருந்து – குமரக் கோட்டத்திலிருந்து – வந்ததாகச் சொன்னவர் வேறு யாராக இருக்கமுடியும்?

தோட்டத்தின் ஒரு மூலையில் இருந்த மாட்டுக் குடில் ஒன்று நொச்சித்தடியடிக்கு இடம் பெயர்கின்றது – வேலாயுதப் பெருமானின் கோயிலாகப் புனிதமடைகின்றது.

வெற்றிலைத் தோட்டத்தை விரும்பி வெற்றிவேற் பெருமான் வந்து சேர்ந்த அதிசயத்தால் ஆட்கொள்ளப்பட்ட அடியவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தது. அவர்கள் தாமாகவே செய்த பொங்கல், பூசைகளை ஓர் ஒழுங்குமுறைக்குக் கொண்டு வருவதற்காக வேலாயுதரும் அவரைத் தொடர்ந்து அவருடைய பிள்ளைகளான இராமநாதர், கந்தர், கதிர்காமர், அருணாசலம் என்போரும் அவற்றின் பொறுப்பாளர்களாகப் பணி புரிந்தனர்.

தான் அங்கே இருப்பதை மேலும் உறுதிப்படுத்துவதைப்போல், அருணாசலத்தாரை அருள்வாக்குச் சித்தராகவும் ஆக்கினான் முருகன்.

முருகனின் அருள் நோக்கையும் தன்னுடைய அருள் வாக்கையும் நாடி வருவோரின் தொகையைக் கருத்திலெடுத்து மாட்டுக் குடிலைச் செங்கற் கோயிலாக மாற்றி அமைத்தார் அருணாசலத்தார். கூட்டு வழிபாடு, கந்தபுராண படனம் ஒழுங்காக இடம்பெற்றன. அருள்வாக்கு வழங்கியதுடன் நிற்காமல், நோயாளர்களுக்கு உரிய மருந்துகளைக் கொடுத்துக் குணமாக்கும் பணியையும் அருணாசலத்தார் செய்தார்.

அருணாசலத்தார் முதுமையடைய , அவருடைய மகன் சுப்பிரமணியம் கோவிற் பொறுப்பை ஏற்றார். ஆனால் தனியாளாக நின்று கோவிலை நிர்வகித்துக்கொண்டு, கோவிற் பூசைகளையும் செய்ய முடியாதிருந்தபடியாற் பூசைப் பொறுப்பு முழுவதையும் அந்தணர் ஒருவரிடம் ஒப்படைத்தார். உரிய நேரத்தில் அவர் மேற்கொண்ட கடமைப் பகிர்வு காரணமாக, கோவில் மேலும் வளர்ச்சி அடையவே, செங்கற் கோவிலை வெள்ளைக் கற்கோயிலாகக் கட்டும் பணியும் தொடங்கப்பெற்றது.

அந்தத் திருப்பணி நிறைவடையும் முன்னரே சுப்பிரமணியர் முருகனின் திருவடியை நாடிச் சென்றுவிட்டார்.

அவருக்குப் பின்னர் ஆலய நிர்வாகியாகக் கடமையாற்றிய அவருடைய மகன் ஆறுமுகம், அருள்வாக்குச் சித்தராகவும், அரியதோர் வைத்தியராகவும் விளங்கியமை, அடியவர் பலரை மேலும் கவர்ந்தது. ஆனால் அவருடைய அன்றாடக் கடமைச் சுமை, ஆலயக் கட்டடப் பணிகளைத் தாமதிக்கச் செய்தது. பொருளாதார முடையும் பின்னடைவை ஏற்படுத்தியது.

"எல்லாவற்றையும் எப்படிச் சமாளிக்கப்போகின்றார் பார்ப்போம்." எனக் காத்திருந்து பார்க்க விரும்பாமல், அவருடைய கனவிலே தோன்றி, "தாவடியிலுள்ள ஆறுமுகம் முதலியாரிடம் போ, அனைத்தும் சுபமாக முடியும்" என்று ஆலோசனை சொன்ன முருகன், அதே வேளையில் ஆறுமுக முதலியாரின் கனவிலும் தோன்றி, "இணுவிலிலிருந்து வருகின்ற ஆறுமுகத்தாருக்கு இன்றிலிருந்து எல்லா உதவிகளையும் செய்து கொடு" என்ற ஆணையையும் விடுத்தான்.

இவ்வாறு, ஆறுமுகத்தாரை ஆறுமுகத்தாரிடம் போகச் சொன்ன ஆறுமுகத்தானின் அருளாணையாற் கட்டட வேலைகள் விரைவுபெறத் தொடங்கின.

"கண்ணுக்குள் எண்ணெய் விட்டபடி" எல்லா விடயங்களிலும் மிகவும் எச்சரிக்கையாக இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் தவறுகள் ஏற்படுவதையும், அவை யாருக்குமே தெரியாமற் போவதையும் பற்றி நாம் கேள்விப்படுவதுண்டல்லவா? ஆனால் எல்லாந் தெரிந்த இறைவனுக்கு...?

பொளிந்த வெள்ளைக் கற்களை வைத்துக் கட்டும் வேலை மிக மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அவ்வேளை, குறிப்பிட்ட ஒரு கல்லின்மேல் அணிற்பிள்ளை ஒன்று துள்ளித் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தது. வேலையில் ஈடுபட்டிருந்த

⟶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரிக்கு அது சினத்தை மூட்டியது. சிறுகல் ஒன்றை எடுத்து அணில்மேல் எறிய, அது அவ்விடத்திலிருந்து ஓடி மறைந்துவிட்டது. மிகச் சாதாரணமான இந்த நிகழ்ச்சியை வேறு யாருமே கவனிக்கவில்லை; ஆசாரியும் அதை உடனே மறந்து விட்டார்.

ஆனால், அந்த நிகழ்ச்சி, அன்றிரவே ஆலய நிர்வாகி ஆறுமுகத்தாருக்கு ஒரு கனவாகக் காட்சியளித்தது. காட்சியுடன் நிற்காமல், அணில் விளையாடிய அந்தக் கல்: கோறைக் கல் என்ற உண்மையும் உணர்த்தப்பட்டது.

விடிந்தபின், கட்டட வேலையை மேற்பார்வை செய்வதற்குச் சென்ற ஆறுமுகத்தாருக்கு அந்தக் கோறைக் கல்லை அடையாளம் காண்பதிற் சிரமமேதும் இருக்கவில்லை. ஆசாரியைக் கொண்டு அதை அகற்றுவித்துவிட்டு அந்த இடத்திலே எவ்வித பழுதுமற்ற ஒரு கல்லைவைத்துக் கட்டுவித்த பின்னர் அவர் மனத்திலே நிம்மதியும் கந்தப்பெருமான் அந்த ஆலயத்தைக் கண்ணும் கருத்துமாக என்றுமே காத்தருள்வான் என்ற நம்பிக்கை கலந்த மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

அக்காலத்திலே கோவில் அர்ச்சகராயிருந்த சின்னையர் அவர்களுக்கு வேலவரை ஆறுமுகப் பெருமானாகவும் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் தலை தூக்கியது. வள்ளி தெய்வயானையுடன் சேர்ந்த ஆறுமுகப்பெருமானை அழகு மயிலொன்றில் வைத்துப் பார்க்கவேண்டும் என்ற ஆசையை அவராற் கட்டுப்படுத்தவே முடியவில்லை. மகப்பேறற்ற அவர், தன்னிடமிருந்த பணம் முழுவதையும் செலவிடச் சித்தமாயிருந்தார். தலை சிறந்த கன்னார் ஒருவரை அழைத்து, கோவில் வளாகத்திலேயே விக்கிரக வார்ப்புக்கு ஏற்பாடு செய்தார். ஆனால் இரண்டு தடவை வார்க்கப்பட்டபோதும் விக்கிரகம் சரியாக அமையவில்லை. கோவில் உரிமையாளர் ஆறுமுகத்தார் அதைப்பற்றிச் சிந்தித்தார்.

"நீங்களும் உங்கள் மனைவியும் மடிப்பிச்சை எடுத்து, அமுது பொங்கி முருகனுக்குப் படைக்கவேண்டும் – மயில்வாகனத்தில் ஆறுமுகப்பெருமானை "இருந்தருளச்" செய்யாமல் எழுந்து நிற்கும் திருக்கோலத்தில் மூவரையும் தனித்தனியாகக் கன்னார் வீட்டிலேயே வார்ப்பிக்க வேண்டும்" – ஆறுமுகத்தாரின் அருள்வாக்கை, ஆறுமுகப்பெருமானின் திருவாக்காகவே பாவித்து, அதன்படி வார்ப்பு வேலையைச் செய்வித்தார். சின்னையர். தேவையான உலோகங்கள் உருவாக்கப்பட்டுக்கொண்டிருந்ததை உள்ள மொன்றிப் பார்த்துக்கொண்டிருந்த அர்ச்சகரின் மனைவி, தான் அணிந்திருந்த தங்கத் தாலியையும் கொடியையும் கழற்றி அந்தப் பாத்திரத்திற் போட்டார். அழகுப் பொலிவும் அருட் பிரகாசமும் நிறைந்த ஆறுமுகப்பெருமான் தன் அன்புத் தேவியருடன் அற்புதமாக உருவாகிவிட்டார். உருவுந் திருவும் அழகும் அருளும் பொலியும் இந்தத் தெய்வீகத் தோற்றத்தைத் தம் உள்ளத்தில் வைத்து ஊஞ்சலாட்டித் திளைப்போர் எண்ணற்றோர்.

மாட்டுக் குடிசையாய், செங்கற் கோயிலாய், வெள்ளைக் கற்கோயிலாய், மொட்டைக் கோபுரம் ஒன்றும் மூன்றுதள இராஜ கோபுரம் ஒன்றும் இவற்றிடையே பெரியதொரு மண்டபத்தையு முடையதாய் மலர்ந்த பெருங்கோயிலுக்கு மேலும் ஒரு சிறப்பைச் செய்யவேண்டும் என்ற அருட்சிந்தனை, பெரிய சந்நியாசியார் எனப் புகழ்பெற்ற சுப்பிரமணியம் என்ற சித்த புருஷருக்கு ஏற்பட்டது. கலை எழிலும் அருள்வீச்சும் நிறைந்த மஞ்சமொன்றைச் செய்விக்கத் திருவுளங்கொண்டார் அவர். பற்பல அற்புதங்களின் கர்த்தாவாக விளங்கிய அவர், புண்ணியச் செயலொன்றை நினைத்தாலே போதும், அது நடந்தே தீரும் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் இருந்தது. இணுவிலிலேயே பெற்ற மூலவளங்களைக் கொண்டு தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பாசாரியர்களால் உருவாக்கப்பட்ட அந்த மஞ்சம், சரியாக ஒரு நூற்றாண்டை எட்டிப் பிடித்துள்ள நிலையில் – அன்று கண்ட மேனி, அணுவளவும் அழியாததாய் – அதே கம்பீரத்துடன், அதே கலைப் பொலிவுடன் இன்றும் சேவையில் ஈடுபட்டு வருகின்றது. உலகப் பெருமஞ்சம் என்ற பெரும் புகழுடன் மகோற்சவ காலத்திற் பன்னிரண்டாம் திருவிழாவிலும், தைப்பூசத் தினத்திலும், ஆறுமுகப் பெருமானையும் அழகு மங்கையர் இருவரையும் தன்னகத்தே கொண்டு, ஆடும் மயிலாய் அந்த மஞ்சம் அசைந்துவரும் அற்புதக் காட்சியைக் " காணக் கண் கோடி வேண்டும்".

சென்ற நூற்றாண்டின் மத்தியில் உருவாக்கப்பட்ட அறங்காவலர் சபையின் தீர்மானத்தின்படி, மூலவரான வேற்பெருமானுக்குப் பதிலாக, வள்ளி தேவசேனாசமேத முத்துக்குமாரஸ்வாமிப்பெருமான் பிரதிஷ்டை செய்யப்பெற்றார். 1968 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுப் பெருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. ஆனி அமாவாசையைத் தீர்த்தத் தினமாகக் கொண்டு 25 நாள்கள் திருவிழா நடைபெறுகின்றது.

கலியுக வரதனின் கருணா கடாட்சத்துக்குப் பாத்திரரான அடியவர்கள் பலர் தனித்தும் ஒன்று சேர்ந்தும் பல்வேறு திருப்பணிகளைக் காலத்துக்குக் காலம் செய்துள்ளனர்.

முன்னர் இருந்த மூன்று தள இராஜ கோபுரத்தின் இரண்டு தளங்கள் நீக்கப்பட்டு, எஞ்சியிருந்த முதலாவது தளத்துடன், மேலும் நாலு தளங்களைச் சேர்த்து ஐந்துதள இராஜகோபுரம் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இலண்டனிலிருந்து தருவிக்கப்பட்ட மிகப்பெரிய காண்டாமணி, புதிதாக அமைக்கப்பட்ட மணிக் கோபுரத்தில் இடம்பெற்று மங்கல நாதம் எழுப்பி வருகின்றது.

2004 ஆம் ஆண்டில் ஆறுமுகசுவாமி வாசற்கோபுரம் கட்டப்பெற்றது.

பழைய கட்டுத்தேர் பழுதடைந்ததையடுத்து, 1980 ஆம் ஆண்டிலே புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது. 1999ஆம் ஆண்டிலே சிவனுக்குத் தேருக்குரிய அழகான அடித்தளமும் 2009ஆம் ஆண்டிற் பிள்ளையாருக்கும் அழகான தேரும் அமைக்கப்பட்டன.

இந்த ஆலயத்தின் வடக்குப் பக்கத்திற் சாந்தியடி வைரவர் சந்நிதானத்துக்கு முன் அமைந்திருப்பதே இவ்வாலயத்தின் புனித தீர்த்தக்கிணறாகும். அடியார்களுக்கு ஏற்படும் நோய்களைக் குணமாக்கிச் சாந்தியளிக்கும் சக்தி இந்தத் தீர்த்தத்துக்கு உண்டு.

⌘⌘⌘

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க, முதலிலே இராச கோபுரத்தை வணங்கிவிட்டு உள்ளே செல்வோம்.

⟶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடித்தம்ப மண்டபத்தில் இருக்கின்ற சூரியன், சந்திரன், பிள்ளையார், கொடித்தம்பம், பலிபீடம், மூஷிகம் ஆகியோரை வணங்கி, உள்ளே சென்றால் ஸ்நபன மண்டபத்திலே சிவன் அம்பாள், நடேசர் தரிசனம் கிடைக்கும். ஆறுமுக சுவாமி மண்டபத்தில் அதன் பெருக்கேற்றபடி வள்ளி தேவசேனா சமேதராக ஆறுமுகப் பெருமான் காட்சியளிக்கின்றார். மூலஸ்தானத்தில், முன்னர் குறிப்பிட்டதைப்போல் வள்ளி, தேவசேனா, முத்துக் குமாரஸ்வாமி ஆகியோரின் சிலா விக்கிரகங்களைத் தரிசிக்கலாம்.

தெற்கு உள் வீதியில் சமய குரவர், அருணகிரிநாதர், தட்சணா மூர்த்தி ஆகியோரை வழிபடலாம். மேற்கு வீதியில் , பிள்ளையார், சோமாஸ்கந்தர், சந்தான கோபாலர், இலக்குமி, பழனி ஆண்டவர் ஆகியோருக்குத் தனிச் சந்நிதிகள் உண்டு. வடக்கு வீதியிற் பள்ளியறை உண்டு.

பிள்ளையார், சிவன் அம்பாள், வேல், பழனி ஆண்டவர், சந்தான கோபால கிருஷ்ணர், இலக்குமி சண்டேஸ்வரர் ஆகியோரை எழுந்தருளி மூர்த்திகளாகத் தேவ சபையிற் தரிசிக்கலாம். வசந்த மண்டபத்தில் தேவியருடன் முத்துக் குமாரஸ்வாமி வீற்றிருக்கின்றார்.

உள்வீதியின் வடகிழக்கு – கிழக்குப் பகுதியில் நாகதம்பிரான், வைரவர், நவக்கிரகங்கள் ஆகியோர் காட்சியளிக்கின்றனர். யாக மண்டபமும் அங்கே உண்டு.

தினமும் அதிகாலை 5.30, காலை 8.00, நண்பகல் 12.00, பிற்பகல் 4.00, இரவு 5.00 ஆகிய வேளைகளிற் பூசைகள் நடைபெறுகின்றன. மாலை 6.30 மணிக்கு அர்த்த சாமப் பூசை நடைபெற்று அழகான சிறிய இரதத்தில் சுவாமி பள்ளியறைக்கு எழுந்தருளுவார்.

மாதப்பிறப்பு, மாதாந்த கார்த்திகை, வெள்ளிக்கிழமை கந்தசஷ்டி, தைப்பூசம் போன்ற புண்ணிய தினங்களில் விசேட அபிஷேகங்கள், திருவிழாக்கள் போன்றவை நடைபெறுகின்றன.

நீண்ட காலம் இறைவைக் கந்தனை அன்புடன் ஆராதித்த அமரர்களான சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் ஆகியோரின் வாரிசுகளான சிவஸ்ரீ உருத்திரக்குருக்கள் சிவஸ்ரீ நடராஜக் குருக்கள், சிவஸ்ரீ ஏகாம்பரதாசக் குருக்கள் ஆகியோர் இக்கோயிலின் நித்திய நைமித்தியப் பணிகளிற் பக்தி பூர்வமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பழம் பெருமையுடன் பலவகைச் சிறப்புக்கள் சேர்ந்து பக்தி மணம் கமழும் இந்தப் பெரிய கோவிலுக்குச் செல்வோர் அவன் அழகாலும் அருளாலும் அமைதிச் சூழலாலும் ஈர்க்கப்படுவர் என்பது நிச்சயம்.

## சிவோகம் பாவனை

'தத்வமஸி' என்றதன் பொருள் "நீ அது ஆகிறாய்" என்பதாகும். 'தத்' என்றால் 'அது'. 'அஸி' என்றால் 'ஆகிறாய்'. அது என்பதை பிரமம் எம்மிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதாக உணர்த்தும். சைவசித்தாந்தம் 'தத்' என்பதற்கு சிவன் என்று பொருள் காணும். அவன் எமக்கு அருகில் இருக்கிறான் என்பதைச் சைவக் கிரியைகள் உணர்த்தும்.

சிவோகம்பாவனை என்பது சிவன் எம்முள் (எம் அகத்துள்) இருக்கின்றான் என்று பாவனை செய்தல். இது சைவத்தில் அனைப்படும் ஒரு முக்கிய ஆன்மீகப் பயிற்சி. சிவத்தை நோக்கி ஆன்மிக சாதனை செய்யும் ஒருவன் "நான் சிவமே" என்று எண்ணினால் அவன் சிவமாம் தன்மை பெறுகிறான். பாரதி அறுபத்தாறு என்ற பாடலில் எந்நேரமும் சிவோகம்பாவனை செய்யும்படி பாரதி வலியுறுத்துகிறார். "அதுதானவன் சிவோகமென்று சாதிப்பாயே" என்பது அவரின் வார்த்தை. சைவ சித்தாந்தம் காட்டும் சிவோகம்பாவனை பரமுத்தியை ஏற்படுத்தும் என்று அவர் தெளிவுபடுத்துகிறார்.

சித்தாந்த ரத்தினம் கலாநிதி க. கணேசலிங்கம்,
(சைவநெறியில் – தொடர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ்ந்த நம் முன்னோர், பூ உலகில் ஏற்படும் மாற்றங்கள், கண்ட காட்சிகள், கேட்ட ஓசைகள் போன்றவற்றின் அடிப்படையில் காலை, மாலைக் காலங்களை வகுத்துக் கொண்டனர். காலையும் மாலையும் கடவுளை வழிபடுவதற்குரிய மிகச் சிறந்த வேளையாகக் கருதிச் செயற்பட்டனர்.

# சமயம் ஒரு வாழ்வியல்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

ஒரு நாளின் தொடக்கத்தை எவ்வாறு உணர்வது? நாள்காட்டிகளும் மணிக்கூடுகளும் புழக்கத்தில் இருக்கும் தற்காலத்தில் இவற்றின் மூலம் ஒரு நாளின் தொடக்கம் அறியப்படுகிறது. தொழில்நுட்ப நிலையான கருவிகளின் பயன்பாடு அற்ற காலத்தில் நாளின் தொடக்கம் இயற்கையின் செயற்பாடுகளால் அறியப்பட்டது. எமது சமயம் ஒரு நாளின் தொடக்கத்தைக் காலைப் பொழுதாக வரையறை செய்துள்ளது. இறை வழிபாட்டுக்கு உகந்த காலமாகவும் அது கணிக்கப்படுகின்றது. சமய வாழ்வியலாக இருப்பதால் பொழுது பற்றிய விளக்கங்களும் சமய வழிபாட்டு நடைமுறைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இயற்கைநிலையின் சில செயற்பாடுகள் இந்நாளை நேரத்தைத் துல்லியமாக வெளிப்படுத்திக் காட்டும். இறைவழிபாட்டில் ஈடுபடும் மெய்யடியார்கள் காலைநேரத்தின் செயற்பாடுகளை விதந்து பாடியுள்ளனர். கோயில்களின் செயற்பாட்டு நிலையில் சூரியனுடைய தோற்றம் இருளைப் போக்கிக் காலைப் பொழுதை விளம்பரம் செய்கிறது. "அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய் அகன்றது" என மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளியெழுச்சியிலே சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அதைத் தொடர்ந்து பின்வருமாறு பாடுகிறார்:

"கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படுகின்றது..........."

இந்த காலைப்போதில் சூரியனுடைய வரவு மட்டுமன்றி வேறு பல செயற்பாடுகளும் காலைப் பொழுதின் வரவைக் கூறுவதை எடுத்துக்காட்டியுள்ளார். பூங்குயில்கள் கூவுகின்றன. கோழிகளும் கூவுகின்றன. சிறிய பறவைகளும் ஓர் ஒழுங்கிலே ஒலி எழுப்பிக்கொண்டு இருக்கின்றன. அதே போலக் கோயிலில் ஓர் ஒழுங்கில் சங்கு ஊதப்படுகிறது. 'இயம்பின' என்ற சொல் ஒழுங்கையான ஒழுங்கிலே ஒலி எழுப்பப்படுவதைக் காட்டுகின்றது. காலைப் பொழுதில் குயிலின் கூவலையும் கோழியின் கூவலும் பறவைகளின் ஒலியும் என இயற்கையாக நடைபெறும் செயற்பாடுகள் நாளின் தொடக்கத்தை மக்கள் உணர்வில் காலைப் பொழுதாகத் தெளிவாகக் காட்டுகின்றன. காலைப் பொழுதின் ஒலி ஆரவாரத்தோடு காட்சிநிலையான ஒரு மாற்றமும் ஏற்படுகின்றது. நட்சத்திரங்களின் ஒளி மழுங்குகின்றது. சூரியனுடைய ஒளி மேலோங்குகிறது. இது காலைப் பொழுதின் துல்லியமான காட்சியைக் காட்டுகிறது. இறைவனை திருவடிகளைத் தொழுவதற்கு ஏற்ற காலைப்பொழுதை இயற்கையே எமக்கு வரையறை செய்து காட்டுகின்றது.

இத்தகைய காலைப்பொழுதே வழிபாட்டிற்கு ஏற்ற பொழுதெனக் கொண்டு மக்கள் இறைவழிபாடு செய்வதையும் மாணிக்கவாசகர் தாம் பாடிய திருவெம்பாவையிலே குறிப்பிட்டுள்ளார். கோழிகள் பொழுது விடிந்ததை ஆரவாரத்துடன் அறிவிக்கும்போது திருக்கோயில்களில் வெண்சங்கும் அதை அறிவிக்க ஒலிக்கும். மக்கள் காலைப்பொழுது புலர்ந்ததை அறிந்து வழிபாட்டிற்குச் செல்லும் செயற்பாட்டில் ஈடுபடுவர்.

காரைக்காலம்மையார் காலைப்பொழுதின் தோற்றத்தை ஒரு பாடலிற் குறிப்பிட்டுள்ளார். "காலையே போன்றிலங்கும் மேனி" என இறைவன் திருமேனி வண்ணத்தைப் பாடியுள்ளார். வானத்திலே அதிகாலைப் பொழுதில் கதிரவன் தோன்றும்போது வானமெங்கும் செம்மை படரும். அதுவே காலைப் பொழுதின் வண்ணமாகும். அதுவே இறைவன் திருமேனி வண்ணமுமாகும்.

எனவே எமது சமயம் இயற்கையிலே இறைவனைக் காணும் பயிற்சியை அளித்துள்ளது. நாளின் தொடக்கத்தை நாமே அறிய வழிகாட்டியுள்ளது. மக்களின் மகிழ்ச்சியும் வளர்ச்சிகளும் காலைப் பொழுதினை உடன் அறிவிக்கும். இதனால் பல தேவாரப் பாடல்களிலே நாள்கள் மற்றும் போதுகள் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. காலைப்பொழுதும் மாலைப்பொழுதும் இறை வழிபாட்டிற்கு ஏற்றவையாகக் கணிக்கப்பட்டுள்ளன. 'காலையும் மாலையும் கடவுளை வணங்கு' என்ற முதுமொழியும் வழங்கிவருகின்றது.

நாளாந்தக் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்கு எமது நாளின் தொடக்கமும் முடிவும் நன்கு வரையறை செய்யப்படுதல் வேண்டும். எமது முன்னோர்களின் வாழ்வியல் நடைமுறைகளில் காலக்கணிப்பு மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. விஞ்ஞான வளர்ச்சியால் இன்று கருவிக் கையாட்சியின் பழக்கம் மேலோங்கி வரும் இக்காலகட்டத்தில் நாளின் கூறுகள் பற்றிய தெளிவான சிந்தனை அற்றுவிட்டது. எப்போதும் செயற்கை என்ற எண்ணமே மேலோங்கியுள்ளது. பிற பண்பாட்டுத் தாக்கங்களும் இதற்குக் காரணமாக உள்ளன. ஆனால் மனித வாழ்வியலில் சீர்மை வேண்டுமாயின் நாம் இயற்கையோடு இணைந்து வாழவேண்டும். அதனை எம்முடைய சமயம் நடைமுறைகளால் நன்கு விளக்கிக்காட்டியுள்ளது. முன்னோர்களும் பாடல்களில் பதிவுசெய்து வைத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்துள் ஒளிரும் ஒளி

நயினை நா. யோகநாதன், B.A.

உடலில், உயிரில், உணர்வில் கலந்து நிற்பது இறைமை. எங்குமாய் எல்லாமாய் இலங்குவது இறைமை. இறைமையன்றி எப்பொருளும் இல்லை. எவ்வுயிரும் இல்லை. உள்ளும் புறம்புமாய் உள்ளதெல்லாம் தானாகி நிற்பது இறைமை எனும்போதும், எல்லா உடல்களிலும், உயிர்களிலும் இலங்குவது இறைமை என்பதும், நம் உயிராகவும் நின்று நம்மை இயக்குவதும் இறைமையே. எனவே, உலகனைத்துக்கும் உயிராக ஒளிரும் இறைமையே நம் உயிராகவும் உள்ளது என்பது தெளிவாகின்றது. இறைவன் உயிராக மட்டுமன்றி நம் ஊனிலும் உணர்விலும் உள்ளான் என்பதை, "ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுள் கலந்து" என்பார் மணிவாசகப் பெருமான். நாவுக்கரசரோ இதனை "ஊனாகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்" என்றார். "தேனுக்குள் இன்பம் சிறந்திருந்தாற்போல் ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே" என்பது திருமந்திரம். இவற்றின்படி எங்கேயோ எட்டாத தூரத்தில் விண்ணுலகில் இறைவன் வீற்றிருக்கின்றான் என்ற கோட்பாட்டிற்கும் எங்குமாய் எல்லாமாய் எமக்குள்ளும் இறைவன் இலங்குகின்றான் இயங்குகின்றான் என்ற கோட்பாட்டிற்கும் இடையேயுள்ள இடைவெளி இல்லாமல் போய்விடுகின்றமையை நாம் உணருகின்றோம்.

அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்கிநிற்கும் இறைமை, அற்பமான நம் உடலிலே புகுந்து, உயிரில் கலந்து நிற்கிறது என்றால், அந்த இறைமையின் இன்னருளை என்னவென்று மதிப்பது? உடம்பு உயிர் இரண்டும் மக்களுக்கு மட்டுமன்றி எல்லா உயிரினங்களுக்கும் உள்ளன. அவ்வுயிரினங்களின் உடம்பிலும் உயிரிலும் இறைமை இணைந்துள்ளது ஆயினும், உள்ளுறைந்துள்ள இறைமையினை உணரும் ஆற்றல் அவற்றிற்கு இல்லை. காரணம் ஓர்ந்து உணரும் கருவியான மனம், பிற உயிர்களுக்கு இல்லை என்பதே. மனிதனுக்கு மட்டுமே மனம் என்ற சிறந்த கருவி உள்ளது. அது ஓர்ந்து உண்மைகளை உணரும் ஆற்றல் நிரம்பக்கொண்டது. "உருகுவார் உள்ளத்து ஒண்சுடர்" என்று உள்ளத்துள் ஒளி வடிவாக இறைவனைக் காணுகின்றார் சம்பந்தர். இதையே "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்றும் "தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்" என்றும் சொன்னார் திருமூலர். இதனைத் தெளிவான தமிழ் நடையில் "சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்" என்றார் மணிவாசகப் பெருமான்.

சிந்தைவேறு சிவன் வேறு அல்ல. சிந்தை தெளியும்போது சிந்தையிலே சிவம் வெளிப்படுகின்றது. இறைவன் அகக் காட்சியில் காணத் தக்கவர். ஆனால் அப்பரம்பொருள் உன் அகக் காட்சியில் தோன்றவில்லை எனில், அப்பரம்பொருளே இல்லை என்று கூறிவிடாதே. கலங்கிய தண்ணீரில் சந்திரனுடைய தோற்றம் தோன்றாது. தோன்றாமையால் சந்திரனே இல்லை என்று முடிவுக்கு வருவது அறிவுடைமை ஆகுமா? உன் உள்ளம் கோபம், குரோதம், மாது முதலியவைகளினால் கலங்கி இருப்பதனால் பரம்பொருளின் காட்சியைக் காண முடிவதில்லை. ஆனபடியால் முதலில் உன் உள்ளம் தெளியட்டும். தெளியும்போது தெய்வீகம் புலப்படும். இதனால்தான் சிவன் இருப்பது தெளிந்த நம் சிந்தையிலேயே என்று ஓதுகின்றார் திருமூலர். "சிந்தை தெளியத் தெளிய வல்லார்கட்குச் சிந்தையின் உள்ளே சிவன் இருந்தானே" என்று திருமந்திரம். எண்ணத்திற்கும் எட்டாத இறைவன் நம் இதயத்தில் உள்ளான். உன்னுதற்கும் அரிய ஒருவன் நம் உள்ளத்தில் ஒளிர்கின்றான். நினைப்பதற்கும் இயலாத நிமலன் நம் நெஞ்சிலே நிலவுகின்றான். புறப்பொருளாகக் கண்ட இறைவனை இங்கே அகப்பொருளாகக் காண்கின்றோம். பேருயிராகக் கண்ட இறைவனை நம் ஆருயிரிலே காண்கின்றோம்.

இவ்வாறு எம்மோடு எம் உள்ளத்தில் எமக்குள்ளே உறையும் இறைவனை நாம் எளிதாக உணர முடிவதில்லை. இது ஏன்? உள்ளத்திலும் உணர்விலும் உறைந்திருந்தாலும் கள்ளமாக இருக்கும் உன்னை நான் காண்பது எப்படி என்று இறைவனிடமே நாவுக்கரசர் முறையிடுகின்றார். "உள்ளத்தே நிற்றியேனும், உயிர்ப்புளே வருதியேனும் கள்ளத்தே நிற்றி அம்மா எங்ஙனம் காணுமாறே". இதனை அழகாகத் திருமந்திரம் காட்டுவதைத் திருமூலர் கூறும்போது "உள்ளத்து ஒருவனை உள்ளுறு சோதியை உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை உள்ளமும் நானும் உடனே இருக்கினும் உள்ளம் அவனை உரு அறியாதே". உள்ளத்தில் உறையும் இறைவனை உள்ளத்தால் ஏன் காண முடிவதில்லை? நாம் கண்களால் உலகில் பலவற்றையும் காண்கின்றோம். ஆனால் அக் கண்களைக் கொண்டு அக் கண்ணையே காணமுடியாது. அதுபோல் உள்ளத்தினைக் கொண்டு உள்ளத்தில் உறையும் இறைவனைக் காண முடிவதில்லை என்பதே தெளிவு. "கண் ஒன்று தான் பல காணும் தனைக் காணா அகம் அங்ஙனே இல்லையென்னும் ஆகின்றனவே" என்பது ஆழ்ந்து சிந்திக்கத் தக்க அழகான திருமந்திரப் பாடல். ஆயினும், நாம் ஒன்றிய மனத்தோடு ஓர்ந்து உணர முற்பட்டால் உள்ளத்தின் உள்ளே இறைவன் உறைவதை உள்ளார்ந்து உணரலாம் என்கின்றனர் ஞானிகள். "கள்ளத்தைக் கடிந்து ஒன்றி நின்று, உள்ளத்தின் ஒளியைக் கண்டு உணர்மின்" என்பது நாவுக்கரசரின் நல்வாக்கு.

> இறைவன் எங்கும் நிறைந்தவனாய் இருப்பவன் என்பதை அறிவுபூர்வமாகத் தெரிந்துகொள்ளும் நாம், அவன் நம் உள்ளத்திலும் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இருக்கின்றான் என்பதை உணர்வுபூர்வமாகவும் தெரிந்துகொள்ள வேண்டும். உடம்பெனும் ஆலயத்திலே உள்ளம் என்பது கருவறையாக இறைவன் வீற்றிருந்தருளும் இடமாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்ளே நின்ற ஒண்பொருள்" என்று பாடுவார் சுந்தரர். உலகத்து உயிரனைத்திலும், பொருளனைத்திலும், ஊடுருவி, நிற்கும் மெய்ப்பொருள் நம் உள்ளத்திலும் ஊடுருவியே உள்ளான். இவ்வாறு ஓர்ந்து காண முற்படாதவர் உள்ளத்தில் இறைமை என்ற ஒளி, ஒளிந்து கொள்ளுகிறதாம். "ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியான்" என்பது மணிவாசகரின் அற்புதமான மணிவாசகமாகும். ஓர்ந்து காண்பவர் உள்ளத்தில் ஒளிரும் இறைவன், ஓராதார் உள்ளத்தில் இல்லாமற் போய்விடுவதில்லை. ஓராதார் உள்ளத்திலும் இறைமை ஒளி உள்ளது. ஆனால், அது ஒளிந்து உள்ளது. இறைவன் நம் இதயத்தில் இலங்குவதை நாம் ஏன் உணர முடிவதில்லை என்ற வினாவுக்கு அற்புதமான விளக்கமே இது.

அண்டங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கி, அவற்றிற்கெல்லாம் அப்பாலுக்கு அப்பாலாய் நின்று நிலவும் பரம்பொருள் நம் உள்ளத்தில் ஒளிர்கின்றது என்ற பேருண்மையையும், இதன் பயனாக ஏற்படும் இணையற்ற இறை இன்ப அனுபவத்தையும் என்னவென்றுரைப்பது. உயிர் இருப்பதால்தான் உடம்பு அசைகிறது. என்று உணருவதுபோல். கடவுள் இருப்பதால்தான் உலகம் இயங்குகின்றது என்று நாம் நம்புதல் வேண்டும். கடவுளைக் காட்டு எனக் கேட்போருக்கு, உடம்புக்குள் இருக்கும் உயிரைக் காட்டு என்று கேட்போமாயின், அப்போதாவது உள்ளத் தெளிவு வரும். எங்குமாய் எல்லாமாய் இலங்கு இறைவன் நம் உள்ளத்திலும் உறைகின்றான். என்ற உண்மை நம் உணர்விலேயே ஒன்ற வேண்டும். இந்த உணர்வு இல்லை எனில், நம் உள்ளத்தில் ஒளிரும் இறைமை ஒளி, ஒடி ஒளிந்து மறையும் ஒளியாகி விடுகின்றது.

இறைமை என்பது எல்லை இல்லாதது, எங்குமாய் உள்ளது. எல்லாமாய் இருப்பது. என்றெல்லாம் நாம் அறிவு பூர்வமாகத் தெரிந்துகொள்ளுகின்றோம். அதேபோல் இறைவன் நம் உள்ளத்தில் உறைகின்றான் என்ற உண்மையை நாம் உணர்வுபூர்வமாகவும் தெரிந்துகொள்ள வேண்டும். முன்னது இறைமை ஞானம் என்றால், பின்னது இறைமை இன்பம். அனுபவம். இறைவன் நம் உள்ளத்தில் உறைகின்றான் என்ற உண்மை நம் உணர்வாக மலரும்போதுதான், இறைமை அனுபவம் நமக்குக் கிட்டுகின்றது. இதனைவிடுத்து இறைவன் உள்ளத்தில் உறைகின்றான் என்பதுபற்றி நாம் எத்தனை ஞான நூல்களில் படித்தாலும் கேட்டாலும் அதை உணர்வு பூர்வமாக உணர்ந்து நாம் காணவில்லை எனில் பயன் ஏதும் இருப்பதில்லை என்கின்றனர் ஞானிகள்.

ஓர்ந்து உணர்ந்து அறிதல் என்பது மிகவும் பக்குவமான மனநிலையில்தான் ஏற்படும் என்கின்றனர் ஞானிகள். "ஒன்றினால் உணரமாட்டேன் உன்னை உள் வைக்கமாட்டேன்" என ஓதுகின்றார் நாவுக்கரசர். எவ்வளவு படித்தாலும்கூட இந்த உணர்ந்து அறியும் பக்குவம் எழுகின்றதில்லையே என்கின்றார். அடிகள் " ஓதியும் உணரமாட்டேன் உன்னை உள் வைக்கமாட்டேன்" என்கின்றார். பிற உயிர்கள் எதுவுமே இறைவனை உணர்வதில்லை. ஆறறிவு படைத்த மக்களாகிய நாம் தான், நம்முள் உறையும் உண்மைப் பொருளை உணரும் பேறு பெற்றுள்ளோம். ஆறறிவு பெற்றும், இந்த உணர்வினை நாம் எய்தவில்லை எனில், அரிய பிறவியாகிய மானிடராகப் பிறந்ததன் பயனை நாம் இழந்து விடுகிறோம். இறைவன் நம் உள்ளிருக்கின்றான் என்ற உணர்வைப் பெறாதவரையிலும் உலக வாழ்வு நமக்குத் துன்பந்தரும் வாழ்வாக ஆகிவிடுகின்றது என்கிறார் அப்பர் அடிகள். "உள்ளிருக்கும் உணர்ச்சி இல்லாதவர், நள்ளிருப்பர் நரகக் குழியிலே" என்பது அவர் பாடல். இறைவன் நம் அகத்துள் புகுந்துள்ளதே அவனது அருள்தான். அகத்தில் ஒளிரும் அவனை உணர்வதற்கும், அவனது அருளே துணை செய்ய வேண்டும். அவன் அருளில்லை எனில், அவனை உணர்தல் இயலாது. இதனையே மணிவாசகர் "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்றும், திருமந்திரத்தில் "அகம் புகுந்தும் தெரியான் அருள் இல்லோர்க்கு" எனத் திருமூலரும் சொன்னார்கள். உளம் புகுந்த இறைவனை உணர்ந்து உருகும் உள்ளத்தை இறைவன் அருளும் காலம் என்று வருமோ? என எண்ணி ஏங்கினார் மணிவாசகர். நமக்காகவும் இப்பிரார்த்தனை அவரால் செய்யப்பட்டதுபோல்தான் தெரிகின்றது. "ஊனே புகுந்த உனை உணர்ந்தே உருகிப் பெருகும் உள்ளத்தை கோனே அருளும் காலம் தான் கொடியேற்கு என்றோ கூடுவதே". அற்புதமான பிரார்த்தனை இது. நம் உடல் புகுந்த இறைவனை உணர்ந்து உருகி நிற்பதுதான் இறைவனை அனுபவிப்பதாகும். இந்த இறை அனுபவத்தை அளித்து அருளுவதற்காக ஏங்கும் ஞானப் பிரார்த்தனையே இது. நம் எல்லோருடைய உள்ளத்திலும் உயர்ந்து ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கவேண்டிய பிரார்த்தனையும் வேண்டுதலும் இதுவாகவே இருக்கவேண்டும்.

தாயுமானவர் மிக அழகாகச் சொல்லுவார். "உன்னற்கு அரிய பரவெளியாய், உலவா அமுதாய், ஒளி விளக்காய், என்னுள் கலந்தாய் யான் அறியாது இருந்தாய் இறைவா" என்கின்றார். உணரும் உள்ளம்தான் உருகுகின்றது. நினையும் நெஞ்சம்தான் நெகிழ்கின்றது. உள்ளம் உருகுதல் என்றால், உள்ளிருக்கும் ஒண்பொருளை உணர்தல் என்பதாகிறது. அவனை உணர்வதற்கும், அவனருளே வேண்டும். நம் மனம் இரும்பு போன்றது. எளிதில் உருகாதது. ஆயினும் இறைவன் நம் மனத்தை தன்பால் ஈர்க்கின்றான். ஈர்த்து இறை உணர்வை ஊட்டி, உள்ளத்தையும் உடலையும் உருகச் செய்கின்றான். "இரும்பு தரு மனத்தேனை ஈர்த்து, ஈர்த்து என் என்பு உருக்கி கரும்பு தரு சுவை எனக்குக் காட்டி" என்றும் கல்லைப்போன்ற கடுமையான நம் மனத்தினை தன் கருணை வெள்ளத்தில் ஆழ்த்திக் கனியாக்கி விடுகின்றான் அவ் இறைவன் என்பதை, "கல்லைப் பிசைந்து கனியாக்கி தன் கருணை வெள்ளத்து அழுத்தி வினை கடிந்த வேதியனை" என்றும் பாடுவார் மணிவாசகர். இவ்வாறாக உருகி நிற்போரே உள்ளத்துள் உறையும் ஒளியை உணர்ந்து காண்பவர் என்பதை எளிமையாகக் கூறினார். இந்த இடத்தில் திருமூலரின் அனுபவ உண்மையை விளங்கிக் கொள்வது பொருத்தமானதாக இருக்கும். திருமூலர் இறைவனை உள்ளத்துள் ஒளிரும் ஒளியாகக் கண்டார் எனும்போது, இறைவனைக் காணத் திருமூலர் எங்கும் ஓடவில்லை. எந்தக் கோவிலிலும் தேடியலையவில்லை. என்ன உருவத்தில் என்ன நிலையில் அவர் இருப்பார் என்றெல்லாம் எண்ணி, மூளையைப் போட்டு வீணாகக் குழப்பிக் கொள்ள வில்லை. தமது உடலுக்குள்ளேயே இறைவனைத் தரிசித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வோர் உயிரிலும் இறைவன் உறைகின்றான் என்ற ஆன்மீக உண்மையை உணர்ந்து கொண்டபின், இறைவனையாரும் வேறெங்கும் தேடவேண்டிய தில்லை என்று படிப்பினை அவரால் உணர்த்தப்பட்டுள்ளது. தமது உடல் என்ற ஆலயத்தில் வீற்றிருக்கும் தெய்வத்தை, திருமூலர் எப்படித் தரிசித்தார்? "உள்ளுடம்பு ஆலயம்" என்று சொன்ன திருமூலர் "உள்ளம் பெருங்கோயில்" என்றும் சொன்னார். உடல் என்ற ஆலயத்தில் உள்ளேயே அடங்கி இருப்பதுதானே உள்ளம்? அப்படி இருக்க, உடலை வெறும் ஆலயம் என்று சொல்லிவிட்டு, உள்ளத்தைப் பெருங்கோயில் என வர்ணிக்கிறாரே என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

இங்கேதான் திருமூலரின் ஆழ்ந்தகன்ற ஆன்மீக அறிவின் அழகு, மறைபொருள் தரும் சொல்லாட்சியில் அமைந்து கிடக்கின்றது. ஆலயம் எப்போதுமே பிரம்மாண்டமானதாகத் தான் அமைந்திருக்கும். ஆனால், ஆலயத்தின் கருவறையோ, மிகவும் குறுகலான ஓர் அறையாகத்தான் இருக்கும். அவ்வறை குறுகியதாக இருந்தாலும், அந்தக் கருவறையிற்றான் இறைவன் மூலமூர்த்தியாகக் குடிகொண்டுள்ளார். ஆகவே, அந்தச் சின்ன அறை பெருங்கோயில் என்ற தகுதியையும் பெருமையையும் பெறுகிறது. கருவறையைப் பெருங்கோயில் என அழைப்பது மரபு. இங்கே உடலென்ற ஆலயத்திலே, கருவறை என்ற பெருமையை, உள்ளம் பெறுகின்றது. நமது உடலுக்குள் இறைவன் அமர்ந்திருக்கும் இடம் உள்ளம் என்பதை, திருமூலர் தெளிவாகச் சொல்லிவிட்டார்.

இறைவனை அறிவினால் அறியமுடியாது. அக உணர்வினாற்றான் உணர்ந்து அறிந்துகொள்ள முடியும் என்று சொல்லி வருகின்றனர் ஆன்மிகப் பெரியோர்கள். உணர்வுக்கு நிலைக்களனாக உள்ளது உள்ளம். ஆகவே, இறைவன் உடலுக்குள் உறையும் இடத்தை, உள்ளமாகிய கருவறை என வர்ணிக்கின்றார் திருமூலர். "தெளிவுத் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கமாக" எப்போதும் அங்கே காட்சி கொடுத்துக் கொண்டிருப்பான் என்ற திருமூலரின் அனுபவபூர்வமான அருள்வாக்கை நாம் மனப்பக்குவத்தோடு சிந்திப்போமாயின் உண்மை உணரப்படும். அப்போது நாம் தெளிவு பெறுகின்றோம். தெளிவுபெறும்போது, இறைவன் உள்ளத்துள் ஒளிரும் ஒளியாக உள்ளான் என்பதை உணர்வுபூர்வமாக அறியும் ஆன்மிகபலம் நமக்கு ஏற்படுகின்றது.

இறைவன் உள்ளத்தில் ஒளிர்கின்றான் என்று உணர்ந்த ஒருவருக்கு இருக்கும் நிலையில் அவன் இன்னொருவருக்குத் துன்பம் செய்ய நினைப்பானா? இல்லை. ஒருபோதும் நினைக்கவேமாட்டான். தீவினை செய்யும் தீய எண்ணம் கொண்டவர் அனைவருமே, அப்போதைக்கு இறை எண்ணம் சிறிதும் இல்லாத நிலையில் உள்ளவர்களாகவே இருக்கின்றனர். இறைமையை நினைவாக நெஞ்சிற்றான் இவ்வாறான தீவினை எண்ணங்கள் எழுகின்றன. இறைவன் நமது உள்ளத்துள் உறைகின்றான் என்ற மெய்ஞ்ஞானமே நம் உள்ளத்தில் ஒளியாக உள்ளது. இந்த ஞான ஒளியே நம் உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் உருவாகச் செய்கின்றது. உருவாக்கி, நம்மைப் பக்குவப்படுத்தித் தூய வழியைநம் நமக்குக் காட்டி நிற்கின்றது. இந்த ஞான ஒளியே அஞ்ஞானம்தன்னை அகல்விக்கும் நல்லறிவாய் நின்று, மெய்ஞ்ஞானமாகி, மிளிர்கின்ற மெய்ச்சுடராக அமைகின்றது. இந்த ஞான ஒளியே மாசற்ற சோதியாய், மலர்ந்த மலர்ச்சுடராய், நம் உள்ளத்தில் உள்ளே நின்று, மறைந்திட முடியாத இருளை அகற்றி, நல்லொளியையும் நல்வழியையும் காட்டி நிற்கின்றது. இந்த நல்வழிப் பயணம் எம் எல்லோரையும், இனிமையான நல்வாழ்வுக்கு இட்டுச்செல்லும் என்ற நம்பிக்கையோடு, இவைப் பொருள் எம் நெஞ்சில் நீங்காதானை உணர்ந்து, நினைந்து, உய்தி பெறுவோமாக. "எங்கும் நிறைந்திருந்த சுடர் வெள்ளம் என்னகத்தே பொங்குகின்றது எம்பெருமான் போற்றி நின்றாம் போதுமடா" என்ற நம் பாரதியின் பாவை என்றும் நினைவிற் கொள்வோமாக.

## ஆலய விழாக்களில் ஆடம்பரச் செலவு வேண்டாம்

ஆலயங்களில் பலவற்றில் பெரும் பொருட் செலவில் ஒட்டுக்குப் போட்டியாகத் திருவிழாக்களை நடத்துகின்றார்கள். பத்திரிகைகளில் தேர்த்திருவிழாச் சிறப்பு மலருக்குப் பெருந் தொகைப் பணம் செலவிடப்படுகின்றது. இப்பணத்தையெல்லாம் திரட்டி நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவவேண்டும். ஆலயங்களை நிர்வகிப்பவர்கள் அறங்காவல் பண்பு மிக்கவர்களாகவும் சமய அறிவு உடையவர்களாகவும் இருக்க வேண்டும். இந்து சமய அமைச்சு, ஆலயங்களை 1, 2, 3 எனத் தரம் பிரிக்க வேண்டும். நித்திய பூசைகளுக்கே நடத்த முடியாதிருக்கும் கோயில்களுக்கு, வருமானம் கூடிய கோயில்கள் உதவி செய்ய வேண்டும்.

சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல்
முத்தமிழ் வித்தகர் செல்வச் சந்நிதி
செல்வச் சந்நிதி முருகன் ஆலய...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவோம்

(2010 வைகாசி மாதம் 22 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## சுந்தரர் திருப்பதிகம்

தலம்: திருவெண்ணெய் நல்லூர் பண்: இந்தளம்

திருச்சிற்றம்பலம்

ஊனாய் உயிர் ஆனாய் உடல் ஆனாய் உலகு ஆனாய்
வானாய் நிலன் ஆனாய் கடல் ஆனாய் மலை ஆனாய்
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
ஆனாய் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (7)

பதவுரை: ஊன் ஆய் - ஊனாகி, உயிர் ஆனாய் - உயிருமானாய், உடல் ஆனாய் - உடம்பானாய், உலகு ஆனாய் - உலகமாகினாய், வான் ஆய் - ஆகாயமாகி, நிலன் ஆய் - பூமியானாய், கடல் ஆனாய் - கடலாகினாய், மலை ஆனாய் - மலைகள் ஆகினாய், தேன் ஆர் - தேன் துளிக்கின்ற, பெண்ணைத் தென்பால் - பெண்ணை ஆற்றின் தென்கரையிலுள்ள, வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் - திருவெண்ணெய் நல்லூரில் திரு அருட்டுறை என்னும் திருக்கோவிலில், ஆனாய் - கோயிலாய் எழுந்தருளியவனே. உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே - உனக்கு அடிமைப்பட்டுவிட்ட நான், இனி அப்படி இல்லை எனச் சொல்லலாமோ!

பொழிப்புரை: பெண்ணை ஆற்றின் தென்கரையிலுள்ள திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திரு அருட்டுறை என்னும் திருக்கோவிலிலே, ஊனாகி, உயிராகி, உடம்பாகி, உலகாகி, ஆகாயமாகி, பூமியாகி, கடலாகி, மலையாகி - எல்லாமாகி நிற்கின்ற பெருமானே! முன்னரே நான் உனக்கு அடிமையாகி விட்டேன். நான் அடிமையாகவில்லை என இனி நான் சொல்லலாமா?

ஏற்றார் புரம் மூன்றும் எரியுண்ணச் சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித் திரிவேனோ செக்கர் வானீர்
ஏற்றாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
ஆற்றாய் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (8)

பதவுரை: ஏற்றார் - பகைவராகிய அசுரர்களுடைய புரம் மூன்றும் - மூன்று புரங்களையும், எரி உண்ண - நெருப்பு உண்ணும்படி, சிலை தொட்டாய் - (மேருமலையாகிய) வில்லைத் தாங்கியவரே, தேற்றாதன - தெளிவற்ற சொற்களை, சொல்லி - பிதற்றி, திரிவேனோ - அலையக் கடவேனோ, செக்கர் வான் - செவ்வானத்தின், நீர் - நிறத்தை, ஏற்றாய் - பொருந்தியவரே, பெண்ணைத் தென்பால் - பெண்ணை ஆற்றின் தென்கரையிலே, வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள் - திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திரு அருட்டுறை என்னும் திருக்கோயிலில், ஆற்றாய் - அமர்ந்திருக்கின்ற செந்நெறிச் செல்வரே, உனக்கு ஆளாய் - உனக்கு அடிமையாகிவிட்டு, இனி அல்லேன் எனல் ஆமோ - அப்படி நான் அடிமைப்படவில்லை என இனிச் சொல்லலாமோ?

பொழிப்புரை: அசுரர்களின் முப்புரங்களும் தீயினால் எரிந்து சாம்பராகும்படி மேருமலையை வில்லாக வளைத்த அப்பெருமானே! வானத்தின் செம்மை நிறத்தை உடையவரே! தெளிவற்ற சொற்களைப் பிதற்றிக்கொண்டு நான் திரிவேனோ? திருஅருட்டுறை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி உள்ளவரே! உனக்கு அடிமையாகிவிட்டபின், அடிமையாகவில்லை என இனிச் சொல்வேனோ?

### விஞ்ஞானமும் சமயமும்

அறிவியல் வளர்ச்சியடையும் விஞ்ஞான உண்மைகளை ஏற்றுக்கொண்டு சமயத்தை அணுகவேண்டும். [illegible] உண்மை என்று சொல்லப்படும் [illegible] பொருந்துவதாக [illegible] விஞ்ஞானம் நிரூபித்ததை அனுபவத்தில் காண்கின்றோம். சமய உண்மைகள் அவ்வாறானவை அல்ல. இறைவனருளால் சான்றோர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டவை. அவை புலன்களால் காணவும் ஆராய்ந்தறியவும் அறியாதவை. [illegible] அது.

ச. திருமகமூர்த்தி
[illegible]
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினைச் சித்தர் முத்துக்குமார சுவாமிகள்

திரு. எஸ். சோமசேகரம்பிள்ளை

அருளும் ஆன்மீகமும் பொங்கிப் பொலியும் ஞானபூமி நயினாதீவு. இப்புனித பூமியில், ஈழத்துச் சித்தர்கள் வரிசையிலே பெரிதும் மதிக்கப்படும் நயினைச் சுவாமிகள் என எல்லோராலும் அழைக்கப்படுபவராகிய நயினை ஸ்ரீமத் முத்துக் குமாரசுவாமிகள் 1896இல் அவதாரம் செய்தார்கள். பெற்றோர் சூட்டிய இளமைப் பெயர் தம்பிமுத்து. கல்வி பயிலும் காலத்தில் கல்வியில் நாட்டமின்றி இருந்தார். ஆன்மீகத்துறையில் நாட்டமும் கவிபாடும் வல்லமையும் இயல்பாய் இருந்தன. பள்ளிப் படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டுக் கொழும்பில் பொறுமை எனும் இடத்தில் உள்ள சுருட்டுக்கடை ஒன்றில் வேலைக்குத் தமையனார் அவர்களால் சேர்க்கப்பட்டார்.

இக்கால கட்டத்தில் இந்தியாவிலிருந்து இலங்கை வந்திருந்த சுவாமி ஒருவரை இவர் சந்தித்து அவரோடு சில நாட்கள் பழகி ஆத்மீகத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். தன்னை ஆட்கொள்ள வந்த அந்த சுவாமி சற்குருவானவர் என்பதை முத்துக் குமாரசுவாமி அந்நேரம் அறிந்திருக்கவில்லை. இருவரும் திடீரெனக் கதிர்காமம் நோக்கிப் புறப்பட்டனர். வழியில் தங்கியபோது சற்குருவானவரினால் தீட்சையும் உபதேசமும் இவருக்குக் கொடுக்கப்பட்டன. சற்குருவின் கருணையைக் கண்டு

ஞானபூமியாகிய நயினாதீவில் பிறந்து, அன்பர்கள் பலருக்கு ஞான குருவாக விளங்கியவர் நயினைச் சித்தர் முத்துக்குமார சுவாமிகள். அவருடைய வரலாற்றையும் ஆன்மீகப் பணிகளையும் விளக்குகின்றார் ஓய்வுநிலை அதிபரான கட்டுரையாசிரியர்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உடல் சிலிர்க்க, தோத்திரஞ் செய்து துதித்தார். இருவரும் கதிர்காமக் கந்தனைத் தரிசித்து மீண்டும் கொழும்பு திரும்பினார்கள். சுவாமியவர்களின் ஞானவழியிற் செல்லும் ஆசை மேலிட்டதால், குருவுக்கு சேவை செய்து ஆத்ம ஈடேற்றம் பெறும் தன் எண்ணத்தைக் குருவானவருக்குச் சொல்லித் தன்னோடு தங்குமாறு வேண்டினார்.

ஆனால், வந்தவேலை நிறைவேற்றது என்று எண்ணிய சற்குருவானவர் வெளியிற் செல்வதாகக் கூறிச் சென்றவர்தான் பிறகு திரும்பவில்லை. முத்துக்குமாரசுவாமிகள் தம்மையாட்கொள்ள வந்த குருவை எங்கும் தேடியும் காணவில்லை. பித்துப்பிடித்து அலைந்தார். இறைவனைக் காணவேண்டுமென்ற ஞானப்பசியுடன் இருந்தமையினாற் கடை வேலையில் நாட்டமின்றிக் காணப்பட்டார். கடையிலுள்ளவர்களின் சினத்துக்கு அடிக்கடி ஆளானார். ஒருநாள் கிறுக்கல் கவிதையொன்று எழுதி வைத்துவிட்டு யாருக்குமே கூறாமல் கடையை விட்டுச் சென்றுவிட்டார். ரமண மகரிஷியும் இளமையில் இவ்வாறே "இது நல்ல காரியத்திற் பிரவேசித்திருக்கின்றது. இதனை எவரும் தேடவேண்டாம்" என ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுத் திருவண்ணாமலையை நோக்கிச் சென்றுவிட்டதைப்போல இவரது செயலும் அமைந்தது. துறவுக்கு ஏற்ற பக்குவநிலை ஏற்படும்போது சிறு சம்பவங்களும் கூடத் துறவை நாடிச்செல்லக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

சுவாமிகள் இந்தியா சென்றுவிட்டார். உறவினர்கள் எங்கும் தேடிக் களைத்தனர். இந்தியா சென்ற காலத்தில் [illegible] ஞானகுருவைக் கண்டார். அவர் நிழலில் பலவருடங்கள் தங்கிப் பக்குவநிலையடைந்தார். பின்னர் சிரேஷ்ட சித்தர்களும் தபோதனர்களும் வாழும் அருணாசலக் குகைகளில் (திருவண்ணாமலை) சில வருடங்கள் சமாதி நிஷ்டையில் ஆழ்ந்திருந்தார். ரமண மகரிஷியுடனும் சிலகாலம் தங்கி இருந்து அவரின் ஆத்மீகப் போதனைகளினால் பெரிதுங் கவரப்பட்டுத் தவயோக வாழ்வு வாழ்ந்தார். பின்பு இலங்கை திரும்பித் திருத்தலங்களெல்லாம் தரிசனம் செய்தார். மிக நீண்ட நாட்களின் பின்பு 1933இல் நீண்ட சடைமுடியும், காவியுடையும் பூண்டு வந்து நயினை அம்பிகையின் மஹோற்சவத்தில் கலந்து கொண்டார். உற்சவத்துக்கு அநேக சுவாமிகள் வருவது வழக்கம். அவர்களுள் இவரும் ஒருவராக உலாவியதனால் உறவினர்களால் இவரை அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை. உற்சவம் முடிவடைந்ததும் ஏனைய துறவிகள் வெளியூர் சென்றபின் இவர் மட்டும் நயினை நம்பன் கோவிலில் "அன்னப்பிள்ளை" மடத்தில் தங்கி, அங்கிருந்து ஏனைய கோவில்களையும் தரிசித்து வரலாயினர். ஆனால் யாருமே இவர் யாரென அடையாளம் கண்டிலர். பக்குவப்பட்ட நிலையிலுள்ள ஒரு சிலரால் மட்டும் சுவாமிகளின் மகிமையை அறிந்துகொள்ளமுடிந்தது. அவர்களில் ஒருவர்தான் பின்னாளில் சுத்த இல்லற ஞானியான நயினை அமரர் க. இராமச்சந்திரா அவர்கள். இவர் தன் ஞானகுருவாகச் சுவாமிகளை ஏற்றுக்கொண்டொழுகினார்.

சுவாமிகளின் வழிகாட்டலின்கீழ் இராமச்சந்திரா இந்தியா சென்று ரமண மகரிஷியைச் சந்தித்து ஆசி பெற்றார். இவரை இல்லற ஞானியாக மாற்றி ஞானப்பசியை ஊட்டி வழிகாட்டிய பெருமை முத்துக்குமார சுவாமிகளுக்குரியதே. மற்றையவர் S.N.K என அழைக்கப்படுபவரான சு.நா. கந்தையா பெரியசாத்திரியார் ஆவர். சுவாமிகள் தாம் சமாதிநிலையடைவதற்குச் சிலவருடங்களுக்கு முன்னர், தான் வைத்துப் பூசித்த ஞானவேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.N.K யரிடமே கொடுத்து அருளாசியும் வழங்கினார்கள். யாழிலும் பல சீடர்கள் இவரின் அருளாட்சிக்குப் பாத்திரமாயினர். அவர்களுள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபராக இருந்த அமரர் சண்முகரெத்தினம். குறிப்பிடத்தக்கவர்.

சுவாமிகள் தமதன்பர் சண்முகரெத்தினத்தைக் கொண்டு நயினாதீவின் தென்மேற்குப் பிரதேசக் கடற்கரையோரமாக ஒரு தீர்த்தக்கேணியை அமைப்பித்தார்கள். நாகபூஷணி அம்பாள் தீர்த்தத் திருவிழாவன்று இங்கே நீராடி வருவதை யாரும் அறிவர். பிற்கால கட்டத்தில், வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தரான கரம்பன் தம்பிஐயா அவர்களின் கனவில் தோன்றி இரத்தினக் கல் ஒன்று புதையுண்ட இடத்தைக் குறிப்பிட்டு அதனைப்பெற்றுத் தீர்த்தக்கேணியைச் செப்பனிடப் பணிப்புரை வழங்கினார். தம்பிஐயா அவர்கள் குறித்த இடத்தில் இரத்தினக்கல்லைப் பெற்று அதன் உதவிகொண்டு வைரக் கற்கள் பொழிந்து தீர்த்தக்கேணியைப் புனரமைப்புச் செய்தார். அதனருகில் தீர்த்தக் கிணறும் அமைக்கப்பட்டது. இப்புனித தீர்த்தக் கேணியின் சிறப்புக்குச் சுவாமி அவர்களே காரணகர்த்தா ஆவர். ஆத்மசோதி. நா. முத்தையா அவர்கள் தாம் எழுதிய ஈழத்துச் சித்தர்கள் எனும் நூலில் (1980களில்) சுவாமிகளின் தரிசனம் தமக்கு ஏற்பட்ட விதம், அதன் பாக்கியம் என்பனபற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். இதேபோல் முதலியார் குல சபாநாதன் அவர்கள் 1957இல் வெளியான நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் தேர்த்திருப்பணி மலரில் சுவாமிகளைத் தரிசித்த பாங்கைக்கூறி, சுவாமிகள் துறவுபூண்டு பிரம்மச்சாரியாக வாழ்ந்து வந்தபடியால் அவர் நயினாதீவுக்கு மாத்திரமல்ல, சைவ உலகிற்கே உரித்தானவர் என்பதை உணர்த்தியுள்ளார்.

1948இல் நயினை அம்மன் உற்சவம் முடிந்த கையோடு, உடல் உலகப் பந்தத்திலிருந்து இறுதியாக விடுபடவேண்டிய நாள் நெருங்கிவிட்டதை முன்கூட்டியே தெரிந்திருந்த சுவாமிகள் தான் நினைத்தபடி சிவலிங்கப்புளியடிக்கு வந்தார்கள். பிரம்மஞானம் ஒன்றையே நாடி நின்றார். சிந்தையை அடக்கியே .... சும்மா இருக்கின்ற நிலையை விரும்பினார். தன்னிடம்வரும் அடியார்களுக்கு "இறைவனை மறவாதிருங்கள்" என்பதை அடிக்கடி கூறி ஆசிர்வதிப்பார்.

சுவாமிகளின் வேண்டுகோளின் பிரகாரம் நயினை காட்டுக் கந்தசுவாமி கோயிலின் பின்புறம் நான்குபக்கமும் வாசல்வைத்துச் சமாதி அமைத்து, அவர் ஏற்கனவே வைத்திருந்த சிலைகளுடன் ஒரு முருகன் சிலையையும் செய்து சோமஸ்கந்த முகூர்த்தமாக வைத்து அதனுடன் விநாயகர் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தற்போது இச்சமாதிக் கோயில் சோமாஸ்கந்த ஈஸ்வரம் என்ற பெயரோடு நித்திய பூசையும் நடைபெற்று வருகின்றது.

இவ்வாலயத்தை அவரது சகோதரன் வேலுப்பிள்ளையும், அவரின்பின் அவரது மகன் அமரர் திருநாவுக்கரசுவும் அவரின் தம்பியாரும் சேர்ந்து பராமரித்து வந்தார்கள். இன்றும் அவர்களின் உறவுகளாற் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றது. சித்தர்கள் நடமாடிய இடங்கள் புனிதத்தன்மை வாய்ந்தவை. தெய்வீக சிந்தனை அலைகள் மோதும், வண்ணையிற் கடையிற் சுவாமிகளின் சமாதியும் நல்லூரிற் செல்லப்பா சுவாமிகளின் சமாதியும் சிறப்புற்றிருப்பது போல நயினாதீவில் முத்துக்குமாரசுவாமிகளின் சமாதியும் சிறப்புற்று விளங்குவது குறிப்பிடற்பாலது.

ஆலய முகப்பில் தலவிருட்சமாக அரசும் வேம்பும் பின்னிப்பிணைந்து நிற்கின்றன. அருகில் மடமும் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருஷமும் சுவாமிகளின் குருபூசைத்தினமான தைத்திங்கள் அபரபக்ஷ பூராட நட்சத்திரத்தன்று இங்கு விசேட பூசைகளும், அபிஷேகமும் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப் பெற்றுவருகின்றது.

சுவாமிகளால் பாடியருளப்பெற்றவை :-

1. நமசிவாயமாலை
2. நாகபூஷணி அந்தாதி
3. நயினை நாகேஸ்வரி தோத்திரமாலை
4. உண்மையறி விளக்கம்

அம்பாள் திருவருள் நாடிவரும் அடியார்கள் பலர் சுவாமிகளின் சமாதிக் கோயிலுக்கும், அவரால் உருவாக்கப்பட்ட தீர்த்தக் கரைக்கும் சென்று நீராடித் தங்கள் பாவங்களைத் தீர்த்துக் கொண்டு அம்பாளின் திருவருளையும் நிறைவாகப் பெற்று இன்புறுகின்றனர்.


## இந்துசாதனம் - சந்தா விபரம்

**உள்நாடு**

தனிப்பிரதி : 50/-

ஆண்டுச் சந்தா : ரூபா 600/-

**வெளிநாடு**

| | | |
|---|---|---|
| Australia (AU$) | - | 35 |
| Europe | - | 25 |
| India ( Indian Rs) | - | 500 |
| Malaysia (RM) | - | 50 |
| Canada ($) | - | 35 |
| UK (£) | - | 15 |
| Olher (US$) | - | 25 |

**காசோலைகள்**

Saiva Paripalana Sabai

Account No. 1090946

என்று எழுதப்பெறுதல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

கௌரவ முகாமையாளர்


**இந்துசாதனம்**

இல.66, கல்லூரி வீதி,

யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்
# Hindu Organ
e-mail: editor@hindu organ.com

விக்ருதி வருடம் ஆனி மீ 1ஆம் உ. (15.06.2010)

# இராம இராச்சியம்

அரசியல் என்பது, போக்கிரிகளின் இறுதிப் புகலிடம் என்று ஏளனமாகச் சொன்னார் ஒருவர்—

உண்மை, நேர்மை, அன்பு, அகிம்சை முதலிய விழுமியங்களின் அடிப்படையில் அதனை ஆன்மீகம் கலந்த அறநெறிச் செயற்பாடாக்கி—

இந்தியர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி

மிக நவீன யுத்த தளபாடங்களையும், போதாக் குறைக்கு பொருளாதாரத்தையும் இராணுவ வீரர்களையும் கொண்டு நாட்டையே இராஜ தந்திரத்தையும், மிகப் பாரிய ஆள்பலத்தையும் கொண்டு, வலிமையிலும், ஆட்சி அதிகாரத்திலும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்ற அதி உச்ச நிலையில் இருந்த பிரித்தானியப் பேரரசுக்கு எதிராக—

ஆயுதமின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று செய்து, அதன் இரும்புப் பிடியிலிருந்து இந்தியப் பெருநிலத்தை விடுவித்து இந்தியாவைச் சுதந்திர நாடாக ஆக்கிய காந்தி அடிகளை—

"ஒரு நூறு வருடம் கழித்து இந்தியா வாழ்க்கை கெட்டுப் பாழ்பட்டு நின்றதாயினும் பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த" காந்தி அடிகளை

தேசபிதா அண்ணல் மகாத்மா காந்தி காந்தி அண்ணல் — இருபதாம் நூற்றாண்டின் இணையில்லாத் தலைவன் — என இந்திய மக்கள் மட்டுமல்லாமல் உலகின் உயர்ந்த சிந்தனையாளர்களும் போற்றிப் பாராட்டிய காந்தி அடிகளை

எல்லோரும் எல்லாமும் பெற்று மன நிறைவுடன் சமாதான சகவாழ்வு சந்தோஷ வாழ்க்கையை உறுதிப்படுத்தும் "இராம ராச்சிய"த்தை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்த காந்தி அடிகளை இந்தியா மறந்துவிட்டதா? புறக்கணித்து விட்டதா? ஆம் இன்றைய இந்தியா அந்த மகானின் கொள்கைகளையும் கனவுகளையும் அடியோடு புதைத்துவிட்டதா? என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது—

வல்லரசுப் போட்டியிலும் வணிகப் போட்டியிலும் ஏனைய நாடுகளைவிட இந்தியா விரைவில் முன்னணியில் நிற்க வேண்டுமானால் அதற்காக எந்த வழிமுறையும் கையாளலாம், எந்த முறைகளையும் உபயோகிக்கலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் செயற்படுபவர்களின் போக்கினால்—

இந்தியாவிலே பெரும்பான்மையாக இருக்கின்ற ஏழை பாமர மக்களின் அன்றாட வாழ்க்கையும் எதிர்கால நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புக்களும் சிதைந்து புதைந்து கொண்டிருக்கின்ற இவ்வேளையிலே—

கலங்க வேண்டாம் — நல்வழி காட்டுவதற்கு நாங்கள் இருக்கின்றோம். என்ற நம்பிக்கை ஒலி ஒன்று கேட்கிறது. நம்பிக்கை ஒளி ஒன்று பிரகாசிக்கின்றது—

அந்தச் சுடரை ஏற்றி வைத்திருப்பவர் தென் இந்தியா மதுரை மாவட்டம் காமேடு கிராமத்துக்கு அருகிலுள்ள சாத்தாங்குடி ஊராட்சி மன்றத்தின் தலைவரான திரு. முத்தையா என்பவர்.

"ஒரு வகையில்" பார்த்தால், அவரும் ஒரு அரசியல்வாதிதான் — மக்களிடம் வென்று அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று சொல்லி அவர்களின் வாக்குகளைப் பெற்று வந்தவர்தான்.

ஆனால் அவர் சந்தர்ப்பவாதியல்ல; "ஆற்றைக் கடக்கும்வரை அண்ணன் தம்பி, ஆற்றைக் கடந்த பின்னர் நீ ஆரோ, நான் ஆரோ" என்று சொல்வதுபோல, தேர்தலில் வென்றவுடன் முன்னர் கொடுத்த வாக்குறுதிகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, ஊர் பொதுப் பணத்தில் தானும் தன் குடும்பமும் மட்டும் வளர்வதுதான் லட்சியம் அவரிடம் இல்லை!

ஊர் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்கண்டார்; ஊர்மக்கள் தன்மேலும் ஊர்மேலும் நம்பிக்கை வைத்தார், அவர்களின் ஒத்துழைப்புடன் பிரச்சினைகளை ஒவ்வொன்றாகத் தீர்த்துவைக்கத் தொடங்கினார்.

"ஊரில் யாரும் எதையும் திருடக்கூடாது. திருடுபவர்களுக்குக் கிராமம் முழுவதும் தண்டனை வழங்கும் என்றார்" — திருட்டு நின்றுவிட்டது.

"காவல்துறையினர் ஊருக்குள் வரக்கூடாது; எங்கள் பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக் கொள்வோம்" என்றார் — மக்களின் ஒத்துழைப்பு, மிகப் பெரிய ஆதரவு கிடைத்தது.

மதுவை யாரும் குடிக்கக்கூடாது. மீறினால் கண்டுபிடிக்கப்பட்டால் ஆயிரம் ரூபா அபராதம்; காட்டிக்கொடுப்பவர்க்கு ஐந்நூறு ரூபா சன்மானம். குடிப்பழக்கம் நின்றுவிட்டது.

ஏழையோ பணக்காரரோ யார் இறந்தாலும் ஊர் பொதுச் செலவில் இறுதிச் சடங்குகள் நடந்து ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ஊர் மக்களிடையே ஒருவருக்கொருவர் மதிப்பு, நம்பிக்கை, ஒத்துழைப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சாத்தாங்குடியைப் பின்பற்றி — ஏனைய ஊராட்சி மன்றங்களும் செயற்படுமானால், இந்தியா முழுவதுமே, காந்தி கனவு கண்ட இராமராச்சியம் ஆகிவிடும்!

வல்லாதிக்கச் சிந்தனைகளை மறந்துவிட்டு உலகின் ஆன்மீகத் தலைமையை ஏற்க இந்தியா முன்வர வேண்டும். அதற்கான அனுபவமும் அறிவும் — இந்தியாவுக்கு நிறைந்தே உண்டு. ஆன்மீக சக்தியின் முன், உலகின் வல்லாதிக்க சக்திகள் எல்லாமே வலுவிழந்து செயலிழந்து காணாமல் போய்விடும்!

அதனால் முற்போக்கு ஆளுமைகளை இலங்கை போன்ற சிறிய நாடுகளும் அனுபவிக்கும்!

காந்தியடிகள் கண்ட அந்த "இராமராச்சியம்" வெல்ல வெல்ல உருவாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை

கவிஞர் திரு. இராஜையா குகதாசன்

(இந்துசாதனம் – 2010 சித்திரை – 05 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

239. கையுள்வே லவரின் ஞான சத்திய தாகு மென்றும்
தையலாம் தெய்வி யாரவர் கிரியா சத்தி யென்றும்
மையலாள் வள்ளி யிச்சா சக்திய ளாவ ளென்றும்
சைவநூற் பிரமா ணங்கள் சகலமு மெடுத்துக் காட்டி.

240. இப்பிர பஞ்ச சத்த தாதுக்க ளாலே யன்றி
அப்பர னதுச ரீரம் அமைதத்து வம்எ டுத்தே
சுப்பிர மணியர் தோற்றம் சொல்லிடு விளக்க நூலாம்
சுப்பிர போத மென்னும் பிரசுரம் வெளியிட் டார்கள்.

241. இத்தகை நூலைப் பார்த்து இடிந்தவப் போத கர்மார்
இத்தரை யவர்க ளாற்று இழிசெய லொழித்துக் கொண்டார்
சித்தமுள் சுப்பிர மண்யர் சிறப்புக ளறிந்து மாந்தர்
வித்தக ரிவரே யென்று வியனுல கறிந்து கொண்டார்.

242. கார்த்திகை கந்த சஷ்டி களிதரு சுக்கிர வாரம்
தீர்த்தனி னருளு பாதம் திருமலர் பலகொ ணர்ந்தே
தூர்த்திடு கரத்த ராகிச் சுப்பிர மணியர் பாதம்
ஈர்த்தெழு கோவி லெல்லா மிவர்தரி சிக்கச் சென்றார்.

243. பாசம தாகிக் கோவில் பணிந்திடத் தலைப்பட் டார்க்கு
தாசியர் நடனம் வாண வேடிக்கை காட்டி டாது
தேசுடைப் பிரசங் கங்கள் திருமுறைப் பஜனை யெல்லாம்
நேசம தாகி யாற்ற நிதமவர் தூண்டி னார்கள்.

244. பின்னரும் போத கர்மார் பிதற்றநி ராக ரித்தே
நன்னரும் பொருள்வை சைவதூ ஷணபரி கார மென்னும்
பொன்னனை நூலை யாக்கிப் பொலியுமா னந்த வாண்டு
அன்னவர்க் குறைக்கு மாறே யவரவ னியிற்க ளித்தார்.

245. சுதுமலை நகரிற் சுத்த சைவர்தம் குடியிற் றோன்றி
துதிதமி ழவைக ளோடு சங்கத மொழியும் கற்றே
அதிநிதி பெறவே வட்டூர் மிசனரி யதனிற் சேர்ந்து
கதியுறு மாறு டீஎல் கறோல்என வாழ்சு தேசி.

246. அப்பர மதத்தின் சார்பில் பிரதிகண் டனம தாக
சொற்பிர மாணம் பொருந்தச் சொல்லிடா திருந்த போதும்
நற்சைவ தூஷண பரிகா ரநிரா கரண மென்னும்
சுப்பிர தீப மொன்றைத் தொடுத்தன ரதற்கெ திராய்.

247. மாயிருட் கடலில் வீழ்ந்த மடைமையை யுணர்ந்து பின்னர்
ஆயிரங் கால்கள் கொண்ட அமைவிடஞ் சென்று நாதன்
பாயுறு பரத்து வத்தைப் பழித்ததன் பாவந் தீர
தோயுபொன் னூசி யாலே சொன்னதன் நாவைச் சுட்டே.

248. துண்ணென முன்ன ரீந்த சுப்ரதீ பம்ம றுத்தே
விண்ணுயர் சைவ மேன்மை விளங்கிடு வண்ண மாகக்
கண்ணினில் நீரும் வாரக் காலதீ பிகையாம் நூலை
மண்ணினுக் களித்து வைத்தார் மாண்புடை விசுவ நாதர்.

249. சைவருட் தோன்றிச் சின்னாள் கிறிஸ்தவ ராகி மீட்டுஞ்
சைவமுட் புகுந்து மேன்மை கிறிஸ்தவர்க் குரைத்த சீலன்
மெய்விட உறவி லுள்ளோர் மேலெழக் கினிக்குண் டத்தே
செய்திடு நூலைப் போட்டுத் தீக்கிரை யாக்கி னார்கள்.

250. குறைவறு கல்வி கேள்வி குவலயத் தோங்கி வேறு
துறைபல புகுந்து ஆய்ந்து துலங்கிடு புகழி னோடு
இறைபணி யாற்ற வென்றே இகம்வரு வாரை யன்பால்
நிறைவுறில் வாழ்வு தன்னில் நிலத்திணைத் திடமு யன்றார்.

251. பாதிரி மார்கட் கெல்லாம் பண்டித ரானேன் பாரம்
மாதிரி வாணா ளெல்லாம் மதிதமிழ் சைவ மோங்க
ஓதரி பணிக ளாற்றும் மோர்மமீ தூர லாலே
ஈதரி தென்று முற்றோ ரெடுத்துரை கருத்தும் கேளார்.

252. வேதன மதிக மீவோம் விட்டுநீ ரகலீ ரென்றார்
பாதக மில்லை யென்றே பணிபரித் தியாகஞ் செய்தேன்
ஆதலி லென்னைப் பாருக் கர்ப்பணித் திடலி னாலே
காதலில் வாழ்க்கை தன்னிற் கருத்திலை யெனம றுத்தார்.

**மூன்றாவது இந்தியப் பயணம் (1854)**

253. இல்லறம் புகுதற் குள்ள மிசைந்தில ராகி வாழ்வை
சொல்செப தியான மோடு சொரியுளக் கிளர்ச்சி யாலே
நல்சிவ பூசை செய்யு மாறெழுந் தருளப் பண்ண
வல்லதம் சிரேட்ட ராம்ச தாசிவப் பிள்ளை யோடு.

254. ஆனந்த வாண்டு வாயிரத் தெண்ணூற்றைம் பத்துநா லைப்பசி
வானுந்து குறுநன் பதியா சாரியர் தமைய டைந்தே
தானுந்தன் நண்பர் தாமும் தண்சிவ பூசை யாற்றத்
தேனுந்து ஷணிக லிங்கந் தனிலெழுந் தருளப் பண்ணி

**சிவபூசை எழுந்தருளப் பண்ணல் (1854)**

255. வேண்டுந்தன் கருமங் கூறி விரும்பிதற் கிரண்டு லிங்கம்
வேண்டிடல் வேண்டும் சூத்ரம் விதித்துள வாறு வென்றே
வேண்டிட ஆயத் தங்கள் மேதவர் நீரே செய்ய
வேண்டுமென் றவரின் முன்னே விண்ணப்பஞ் செய்து நின்றார்.

256. அற்புத னருளி னாலே அவரிரு விடத்தை நாடி
மற்றொரு காலை தூர தேசத்து ளொருவ (ரி) ரண்டு
பொற்புறு படிக லிங்கத் துடனவர் வரவே நாவர்
கற்றவ ரிங்கு வந்த காரணம் பகரு மென்றார்.

257. நற்றிரு நகரைத் தேடி நாற்றிசை யிருந்தும் வந்தே
சற்சிவ பூசை யிங்கே யெழுந்தருள் பண்ணிச் செல்வர்
முற்றவக் கருத்தைத் தேக்கி முயன்றிடு வாரைத் தேடி
விற்றிடக்கொணர்ந்தேன்லிங்கம்வேறொன்று மில்லையென்றார்

258. மற்றவ ரின்ன வாறே மறுமொழி புகன்ற காலை
முற்றவக் குருவி னாரும் முன்னெழுந் தருளி வந்தே
உற்றதன் தகைமை யெல்லா முய்த்துணர்ந் தறியு மாறு
நற்றவம் வலவ ரான நாவலர் தமைந வின்றார்.

259. சொற்றிகழ் நூல்கள் கூறுங் குற்றமித் துணையு மின்றி
நற்றிரு வுடைய தாயும் நான்காம் வருணத் தார்கள்
உற்றிடு பூசை பண்ணு மிலக்கண முளதோ வென்றும்
முற்றிரங் குள்ளத் தோடு முழுவதும் பரிசோ தித்தார்.

260. சாத்திர மவையிற் தேர்ந்த சால்பினர் பார்த்துப் பஞ்ச
சூத்திர மியம்பி வைத்த சொற்பிர மாணத் தேயோர்
மாத்திரை யளவு மாறா மாசறு லிங்க மொன்றே
ஏத்திட வுகந்த தென்றே யெடுத்தவர்க் குரைசெய் தார்கள்.

(வளரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தம்

முனைவர் ஆ.ஆனந்தராசன்

(இந்துசாதனம்– வைகாசி மாதம் 2010 – 11ஆம் பக்கத் தொடர்)

**இரண்டு அறிவுகள்**

**109. அறிவுப் பொருளை ஒன்று எனக் கொள்ளாமல், உயிர் என்ற ஓர் அறிவுப் பொருள், பிரம்மம் என்ற மற்றோர் அறிவுப் பொருள் என இவ்வாறு இரண்டாகக் கொள்ளுதல் மிகை என்னும் குற்றம் அல்லவா? என்று ஏகான்மவாதிகள் கேட்பர். அதற்குச் சைவ சித்தாந்தம் என்ன விடை கூறுகிறது?**

மிகை என்னும் குற்றம் எப்பொழுது உண்டாகும்? எல்லா வகையிலும் ஒத்த இரண்டு பொருள்களைக் கொள்ளின் அது மிகை என்னும் குற்றமாகும். ஒன்றே போதியதாய் இருக்க, காரணமின்றி வாளா மற்றொன்றைக் கொள்ளின் அது மிகை என்னும் குற்றமாகும்.

சைவ சித்தாந்தம் கூறும் கடவுட் பொருளும் உயிர்ப் பொருளும் அறிவால் ஒத்தன அல்ல. கடவுட் பொருள் பேரறிவுடையது. உயிர்ப் பொருள் சிற்றறிவுடையது. ஒன்று, அறிவை விளக்குவது. மற்றொன்று அதனால் அறிவு விளங்குவது. ஒன்று அறிவு மயமாய் ஆனந்த வடிவாய் இருப்பது. மற்றொன்று, அதைச் சார்ந்து அந்த ஆனந்தத்தை அனுபவிப்பது.

இவ்வாறு தம்முள் உயர்வு தாழ்வுடைய கடவுளும், உயிர்களும் வேறுவேறு முதல்களாய், வேறு வேறு இயல்புகளை உடையனவாதல் விளங்கும்.

இன்ப வடிவாய் உள்ள கடவுளைச் சார்ந்து அனுபவிப்பதற்கு அறிவுடைப் பொருளாகிய உயிர்கள் வேண்டும். உயிர்களின் அறிவு விளக்கத்திற்குக் கடவுட் பொருளின் துணை வேண்டும். இதனால், கடவுளும் உயிர்களும் ஆகிய இரண்டும் இன்றியமையாதன என்பதும், அக்காரணம் பற்றியே அவையிரண்டும் கொள்ளப்பட்டனவே யன்றி, வாளா கொள்ளப்பட்டனவல்ல என்பதும் விளங்கும்.

ஆதலால், இரண்டு அறிவுகளைக் கொள்ளுதல் பொருந்துவதேயன்றி, மிகை என்னும் குற்றமாதல் இல்லை.

**110. இரண்டு அறிவுப் பொருள்கள் உள்ளன என்ற கருத்திற்கு வேதத்தில் ஆதாரம் உண்டா?**

முண்டக உபநிடதம் உயிரையும் இறைவனையும் இரண்டு பறவைகளாக உருவகம் செய்து கூறுகிறது.

அழகிய சிறகை உடைய இரண்டு பறவைகள் இப்பொழுது ஒருங்கிணைந்தே இருப்பன; ஒத்த தன்மையுடையன. ஆயினும் ஒன்று மரத்தில் உள்ள பழத்தைத் தின்று சுவையை நுகர்கின்றது. மற்றொன்று சும்மா பார்த்துக் கொண்டிருக் கின்றது.

இவ்வுபநிடத மேற்கோளின் கருத்து உயிரும் இறைவனும் அறிவுடைப் பொருளேயாயினும் உயிர் ஒன்றினை அறியும் பொழுது அதுவாக அழுந்தியறியும்; இறைவன் பொதுவாகக் காட்சி மாத்திரமாய் அறிவான் என்பதாகும்.

உயிரும் இறைவனும் வேறு வேறு இயல்பினையுடைய இருவேறு அறிவுப் பொருள்கள் என்பதை இம் மேற்கோள் தெளிவாகக் காட்டி நிற்கின்றதன்றோ?

**111. இறைவனும் உயிரும் இருவேறு முதல்கள் என்பதற்கு நமது திருமுறைகளிலிருந்து சான்று காட்ட முடியுமா?**

இறைவனும் உயிரும், உயர்வு, தாழ்வுகளையுடைய வெவ்வேறு முதல்கள் என்ற கருத்து நமது திருமுறைகளில் பல இடங்களிலும் கூறப்பட்டுள்ளது.

*'இறைவன் தான் எனை ஏன்று கொளுங்கொலோ'*
*'அல்லல் தீர்த்தெனை அஞ்சல் எனுங் கொலோ'*
*'பெரியான் பெரியார் பிறப்பறுப்பான் என்றும் தன்பிறப்பை*
*அரியான் அடி நிழற் கீழ தன்றோ என்றன் ஆருயிரே'*
(4:84:3)

*'கடையவனேனைக் கருணையினாற் கலந்து ஆண்டு கொண்ட*
*விடையவனே விட்டிடுதி கண்டாய்'*
(திருவாசகம், நீத்தல் –1)

என்னும் திருமுறைச் சான்றுகள், இறைவன் ஆண்டானும் உயிர் அடிமையுமாம், உயர்வு தாழ்வுகளையுடைய இரு வேறு முதல்கள் என்பதை வலியுறுத்துவனவாம்.

**ஆன்மா என்ற சொல்வழக்கு**

**112. ஆன்மா என்ற சொல் இறைவனுக்கும் உயிருக்கும் உரிய பொதுப்பெயராக வழங்குகிறதே அஃது எதனால்?**

இறைவனும் சித்துப்பொருள். உயிரும் சித்துப்பொருள். ஆயினும் உயிர் இறைவனுக்குச் சரி நிகரான பொருளாகி விடாது. என்றாலும் அறிவுடைப்பொருள் என்ற முறையில் உயிரும் இறைவனும் ஓரினப் பொருள்கள். அதனால், உயிர் இறைவனோடு சிறப்பு வகையில் தொடர்பு கொள்வதற்கு உரிமையுடையதாகும். அதுபற்றியே, ஆன்மா என்னும் பெயர் இறைவனுக்கும் உயிருக்கும் உரிய பொதுப் பெயராயிற்று.

உபநிடதங்களில் ஆன்மா என்ற சொல் பொதுப் பெயராகவே ஆளப்பட்டுள்ளது. ஆதலால், எந்த இடத்தில் அச்சொல் இறைவனைக் குறிக்கின்றது; எந்த இடத்தில் உயிரைக் குறிக்கின்றது என்று திட்டமாகச் சொல்ல முடியாத நிலையே உள்ளது.

சைவ சித்தாந்த நூல்களில் இத்தகைய இடர்பாடு இல்லை. இங்கே, ஆன்மா என்ற சொல் எங்கே வந்தாலும் அஃது உயிரை மட்டுமே குறிக்கும்.

**உயிர்கள் பல**

**113. உயிர்கள் எண்ணற்றவை என்று சைவ சித்தாந்தம் கூறுவதற்கு என்ன காரணம்?**

உடம்புகள் எண்ணற்றவை. அத்தனை உடம்புகளிலும் இருப்பது ஒரே உயிர்தான் என்றால், எல்லா உடம்புகளிலும் ஒரு சமயத்தில் ஒருவகையான அனுபவமே நிகழ்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, ஒருடம்பில் உள்ள உயிர் மகிழ்ச்சியாக இருக்கும்போது மற்ற உடம்புகளில் உள்ள உயிரும் அதே மகிழ்ச்சியோடு இருத்தல் வேண்டும். ஆனால் நாம் காண்பது என்ன? ஒருவர் மகிழ்ந்திருக்கும் வேளையில் மற்றொருவர் வேதனையில் ஆழ்ந்திருக்கிறார்; இன்னொருவர் சினங் கொண்ட நிலையில் இருக்கிறார்.

இஃது எதைக் காட்டுகிறது? அந்தந்த உடம்பில் உள்ள உயிர்கள் தனித்தனி வேறானவை என்பதைத்தானே காட்டுகிறது?

இவ்வாறு ஒருடம்பில் நிகழும் இன்ப துன்பங்கள் மற்றோர் உடம்பில் அறியப்படாமையால், உடம்பு தோறும் உள்ள உயிர்கள் வெவ்வேறானவை என்பது பெறப்படும். இது பற்றியே உயிர்கள் எண்ணற்றவை என்று சைவ சித்தாந்தம் கொள்கிறது.

**உயிரின் குணம்**

**114. பொருள் என்றால் அதற்கென்று குணம் இருக்க வேண்டும். குணம் இன்றிப் பொருள் இல்லை என்பர். உயிராகிய பொருளின் குணம் எது?**

குணம் என்பது பொருளை விட்டு எப்பொழுதும் நீங்காத அதன் ஆற்றலாகும். குணம் எனினும், ஆற்றல் எனினும், சத்தி எனினும் ஒன்றே.

குணத்தை உடைய பொருள் குணி எனப்படும். காட்டாக, நெருப்பு என்பது குணி. அதன் சுடும் சத்தி அல்லது ஆற்றல் அதற்குக் குணமாகும். அதுபோல உயிர் என்பது குணி. அறிவாற்றல் அல்லது ஞானசக்தியே அதன் குணமாகும்.

**115. அறிவாற்றல் தான் உயிரின் குணம் என்றீர்கள். அறிவாற்றல் மட்டுமின்றி அறிந்த பொருளை விரும்புதலாகிய விழைவாற்றலும், அப்பொருளை அடைய முயலும் செயலாற்றலும் உயிரிடத்தில் காணப்படுகிறதே. அஃது எவ்வாறு?**

விழைவாற்றல், செயலாற்றல் என்பன அறிவின் நிலைவேறுபாடேயன்றி வேறல்ல. உயிரின் அறிவு ஒன்றை அறிகின்ற நிலையில் அறிவாற்றல் அல்லது ஞானசத்தி எனப்படும். அவ்வாறு அறிந்த அறிவே அப்பொருளை விரும்புகின்ற நிலையில் விழைவாற்றல் அல்லது இச்சா சத்தி எனப்படும். பின் அதனை அடைய முயலும் நிலையில் செயலாற்றல் அல்லது கிரியா சத்தி என்ற பெயரைப் பெறும்.

எனவே, உயிரானது ஞானசத்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி எனும் மூன்று வகையான ஆற்றல்களை உடையதாகச் சொல்லப்பெறினும், உயிரின் குணம் என்பது அறிவு; அவ்வறிவின் நிலை வேறுபாடே இவை என அறிதல் வேண்டும்.

**உயிர்களும் இறைவனும்**

**116. இறைவனேயன்றி உயிர்களும் அறிவாற்றல், விழைவாற்றல், செயலாற்றல் ஆகிய மூவகை ஆற்றலும் உடையன. ஆதலின் இறைவனோடு ஒத்த நிலையின என்றும் கொள்ளலாமா?**

உயிர் என்று உண்டோ அன்றே இருள்மலம் ஆகிய ஆணவம் அதன் அறிவினை மறைத்துள்ளது. அறிவு இல்லையாகவே, ஏனை விழைவு செயல்களும் இல்லையாதல் விளங்கும். அதனால், உயிர் இயற்கையில், அறிவுடைய பொருளாயினும், செயற்கையால் அறிவற்ற பொருளாகின்றது.

மலத்தினுடைய பிணிப்பு நீங்குதற்பொருட்டு இறைவன் மாயையிலிருந்து உடல், கருவி, உலகு, நுகர்ச்சிப்பொருள் என்னும் இவற்றைக் கொடுக்கக் கொண்டு, வினைகளைச் செய்து, அவ்வினைகளுக்கேற்றபடி இன்ப துன்பமாகிய உலக போகத்தை இறைவன் கொடுப்ப உயிர்கள் நுகர்ந்து வரும்.

அங்ஙனமே, அவை சுத்த நிலையைப் பெறும் போது வீட்டின்பத்தை முதல்வன் கொடுப்பக் கொள்ளும் உரிமையை உடையன.

இவ்வாறு தன்னுரிமை (சுதந்திரம்) இல்லாத உயிர்கள் இறைவனுக்கு அடிமையாதலேயன்றி அவனோடு ஒத்த நிலையினவாதல் எங்ஙனம்?

**உயிரின் விரிவளவு**

**117. உயிரின் விரிவளவு (பரிமாணம்) என்ன? அது மிகச் சிறிய அளவினதாய் – அணு அளவினதாய் உள்ள பொருளா? அல்லது, உடல் முழுதும் நிறைந்துள்ள பொருளா? அல்லது, கடவுள் போல எங்குமாய் உள்ள பொருளா? இது பற்றிச் சைவ சித்தாந்தம் என்ன கூறுகிறது?**

பாஞ்சராத்திர மதத்தில் (வைணவத்தில்) உயிர் அணு அளவினதாய் நிற்பது என்று கொள்ளப்படும். அவ்வாறாயின், மிகச் சிறியதாகிய உயிர் உடம்பிலுள்ள எத்தனையோ துவாரங்களுள் ஏதேனும் ஒன்றன் வழியாக ஓடி விடாதா? அது உடம்பினுள் நெடுங்காலம் கட்டுண்டிருத்தல் எவ்வாறு?

மேலும் தன்னினும் பன்மடங்கு பெரிதாகிய உடம்பை அஃது எவ்வாறு செயற்படுத்த முடியும்? என்றாற் போன்ற பல தடைகள் எழுகின்றன.

சமண சமயத்தில் உயிர் விரிந்து சுருங்கும் தன்மையுடையது எனவும், அதனால், தான் எடுத்த உடம்பு எவ் அளவினதோ அவ்வளவாய் அதன் கண் நிறைந்து நிற்பது எனவும் கொள்ளப்படும்.

விரிந்து சுருங்கும் தன்மை சடப்பொருளுக்கன்றிச் சித்துப்பொருளுக்கு இல்லை என்பது சித்தாந்தம்.

உயிர் உடம்பு அளவாய் நிறைந்து நிற்கும் எனில், அளவால் பெரிய உடம்பினை உடைய உயிர்கள் பேரறிவுடையனவாய் இருத்தல் வேண்டும். அளவால் சிறிய உடம்பினை உடைய உயிர்கள் சிற்றறிவுடையனவாய் இருத்தல் வேண்டும். ஆனால் அனுபவத்தில் அவ்வாறு சொல்ல முடியவில்லை. மாறியும் காணப்படுகிறது.

ஆகவே, உயிர் உடம்பின் ஓரிடத்து அணுவாய் நிற்கும் என்பதும், உடம்பு அளவாய் நிறைந்து நிற்கும் என்பதும் ஆகிய இருகொள்கைகளும் பொருந்தாதனவாம்.

இனி, ஒரு சாரார் உயிர் இறைவனைப் போல எங்கும் உள்ள பொருள் என்பர். சைவ சித்தாந்தம் இதில் சிறிது வேறுபடுகிறது. சைவ சித்தாந்தத்தில் எல்லாப்பொருள்களும் நித்தமாயும், வியாபகமாயும் உள்ளவை என்று முன்னேயே குறிப்பிட்டோம். அம்முறையில் உயிர் எங்கும் உள்ள வியாபகப்பொருள் ஆயினும், இறைவனோடு ஒத்த வியாபகம் உடையதன்று எனவும், இறைவனது வியாபகத்தின் கீழ் அடங்கிய வியாபகமாய் நிற்கும் எனவும் சைவ சித்தாந்தம் கூறும்.

⟶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**118. ஆன்மா வியாபகப் பொருளாயின், உடம்புக்கு அப்பால் ஏன் அறிவு நிகழவில்லை?**

'ஆன்மா' என்ற சொல்லுக்கு வியாபகம் என்பதுதான் பொருள். ஆன்மாவின் வியாபக இயல்பைத் தோன்றவொட்டாது ஆணவமலம் மூடி மறைத்து நிற்கிறது. பரந்து கிடக்கும் நீரின் இயல்பைத் தோன்ற விடாது பாசி அதன்மீது படர்ந்து அதனை மறைத்து நிற்றல் போன்றது இது.

பாசியை எந்த அளவுக்கு விலக்குகிறோமோ அந்த அளவுக்கு நீர் தோன்றுகிறது அல்லவா? அது போல மாயையின் காரியங்களாகிய உடம்பும் அதில் அமைந்துள்ள ஐம்பொறி முதலிய கருவிகளும் எந்த அளவில் ஆணவத்தை விலக்கி அறிவு விளக்கத்தைக் கொடுக்கின்றனவோ அந்த அளவில் உயிரினது வியாபகம் புலனாகும். இந்த மாயா காரியங்களின் துணையினாலே நாம் உடம்பு அளவில் அறிவு விளங்கி நிற்கிறோம்.

கல்லெறி பட்ட இடத்திலன்றி ஏனைய இடங்களில் பாசி விலகாமையால் அங்கெல்லாம் நீரின் இருப்புத் தெரிவதில்லை. அது போல, உடம்பு கிடைத்த இந்த இடத்திலன்றி உடம்புக்கு அப்பால் ஆணவ மலம் நீங்காமையால் அவ்விடங்களில் அறிவு நிகழவில்லை என உணர்க.

## சார்ந்ததன் வண்ணமாதல்

**119. பசுவாகிய உயிருக்கு அமைந்த சிறப்பியல்புகளுள் முதன்மையானது எது?**

அறிவித்தால் அறிதல், ஒவ்வொன்றாய்ச் சிறிது சிறிதாய் அறிதல், இடைவிடாது அறிந்து நில்லாமல் விட்டு விட்டு அறிதல், அறியப்பட்ட பொருளில் அழுந்தி விடுதல் என்பன பதிக்கு இல்லாது பசுவுக்கே உரியனவாகிய சிறப்பியல்புகளாம்.

பசுவாகிய உயிர் ஒரு பொருளை அறியுங்கால் அதன் அறிவு தன்னியல்பில் நில்லாது, அறியப்படும் பொருளில் அழுந்தி விடும்; அஃதாவது அந்தப் பொருளின் தன்மையையே தன் தன்மையாகக் கொண்டு நிற்கும்.

இவ்வாறு ஒரு பொருள் பிறிதொரு பொருளின் தன்மையைத் தன் தன்மையாகக் கொண்டு நிற்றல் உண்டோ? என்று நீ கேட்கலாம். உண்டு என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகளைத் தரமுடியும்.

படிகத்தின் தன்மை அத்தகையது. அது தன்னைச் சார்ந்த பொருளின் நிறத்தையே தன் நிறமாகக் கொண்டு நிற்கும் என்பது யாவரும் அறிந்தது.

கண்ணுக்கும் அத்தன்மை உண்டு. கண் இருளைச் சார்ந்த பொழுது இருளாகியும், ஒளியைச் சார்ந்த பொழுது ஒளியாகியும் நிற்பதை அனுபவமாக உணரலாம்.

மற்றொரு பொருள் வானம். அஃது இரவில் இருளைச் சார்ந்து இருளின் வயப்பட்டு இருண்டு கிடக்கிறது. பகற் பொழுதில் சூரியவொளியைச் சார்ந்து ஒளிமயமாய்த் திகழ்கிறது.

மேற்காட்டிய பளிங்கும், கண்ணும், வானும் போலப் பசுவாகிய உயிரின் அறிவும் அறியப்படும் பொருளின் தன்மையாய் மாறுவதாகும்.

உனது நிலையையே எண்ணிப்பார். நீ இப்பொழுது உடம்பைச் சார்ந்து 'உடம்பே நான்' என நிற்கிறாய். உடம்பின் தன்மையையே உனது தன்மையாகக் கொண்டிருக்கிறாய். உடம்பிற்கு வருகின்ற பசி, தாகம், நோய் முதலியவைகளை உன்னுடையனவாகக் கொண்டு அல்லற்படுகிறாய்.

இவையெல்லாம் சடமாகிய உடம்பிற்கு உரியவை. இவை உனது தன்மைகள் ஆகா. நீயோ சித்துப்பொருள். ஆயினும் உனது அறிவு சடமாகிய உடம்பைச் சார்ந்து அதன் மயமாக, அதன் தன்மையதாக மாறி நிற்கிறது.

இவ்வாறு சார்ந்ததன் வண்ணம் ஆதல் என்பது உயிருக்கு முதன்மையாகச் சொல்லப்படும் தன்னியல்பாகும்.

## சதசத்து

**120. உயிரைச் சதசத்து என்று கூறுவது ஏன்?**

சைவ சித்தாந்தத்தில், என்றும் மாறுதல் அடையாமல், ஒரு தன்மையாய் நிற்கும் செம்பொருள் சத்து எனப்படும்.

சுட்டறிவினால் அறியப்படுவதாய், மாறுபடும் தன்மையதாய் உள்ள உலகப்பொருள் யாவும் அசத்து எனப்படும்.

சத்தாகிய இறைவன் அசத்தாகிய உலகப்பொருளைப் பொதுவாக அறிந்து செயற்படுத்துவானேயன்றி, அது அதுவாக அழுந்தி நின்று அவற்றை நுகர மாட்டான்.

இனி, அசத்தாக இருக்கின்ற உலகப்பொருள்கள் யாவும் அறிவேயில்லாதவை. அவை சத்தாகிய இறைவனை அறியும் என்றோ, அழுந்தி அனுபவிக்கும் என்றோ கூறுவதற்கில்லை.

அசத்தாகிய உலகமும், சத்தாகிய பரம்பொருளும் ஒன்றையொன்று அறிந்து அனுபவியா என்றால், இவ்விரண்டையும் அறிந்து நுகரக்கூடிய மூன்றாவது பொருள் ஒன்று உண்டு என்பது பெறப்படும். அதுவே உயிராம்.

சில உபநிடதங்களில் பின்வரும் எடுத்துக்காட்டு வருகிறது. இதனைச் சற்று முன்னேயே காட்டினோம். ஒரே மரத்தில் இரண்டு பறவைகள் நட்போடு கூடி வாழ்கின்றன. அவற்றுள் ஒன்று இனிய பழத்தை நுகர்ந்து கொண்டிருக்கிறது. மற்றொன்று நுகராமல் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இதில் பழம் என்பது அசத்தாகிய உலகப்பொருள். உண்ணாமல் பார்த்துக்கொண்டிருக்கிறது எனப்பட்ட பறவைதான் சத்தாகிய பரம்பொருள். பழத்தை இனிதென்று நுகரும் பறவைதான் உயிர். அது பழத்தையும் நுகரும்; பழத்தை விடுத்து மற்றொரு பறவையோடு கூடியும் மகிழும். அதுபோல உயிர் கட்டு நிலையில் அசத்தை நுகர்கிறது; அசத்தை விடுத்து முத்தி நிலையில் சத்தையும் அனுபவிக்கக் கூடியது.

சத்து எனப்படும் முதற்பொருள் வேறு; அசத்து எனப்படும் உலகப் பொருள் வேறு. இவ்விரண்டிற்கும் வேறாக, அசத்தையும் அனுபவிப்பதாய், அசத்தை விடுத்துச் சத்தையும் அனுபவிப்பதாய் உள்ள பிறிதொரு பொருள் உண்டு. அதுவே உயிர்.

உயிரைச் சத்தாகிய முதல்வன் என்று சொல்வதும் தவறு. அசத்தாகிய பொருள் என்று சொல்வதும் தவறு. அது சத்திற்கும் வேறாய், அசத்திற்கும் வேறாய், சதசத்து என்று கூறுதற்கு உரியதாய் உள்ளது.

வளரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளைச் செய்யும் சிவாச்சாரியார் தன்னையே சிவமாகப் பாவித்து, கிரியைகளை நடத்தும் போது தனது உள்ளக் கருத்தை வெளிப்படுத்தும் ஊடகமாக அமைவதே முத்திரைகள். பேசா மொழியான முத்திரைகள் இறைவனுக்கும் அடியவர்களுக்குமிடையில் இணைப்பை ஏற்படுத்துகின்றன. முத்திரைகள் பற்றிய பல விடயங்களை இங்கு விளக்குகின்றார் கட்டுரையாளர்.

## எங்கள் பெருமான் இறைவனுக்கு "இவர்" என்ன சொல்கிறார்?11

# முத்திரைகள்

வித்தியாபூஷணம், பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா B.A. (Hons) (கோப்பாய் சிவம்)

சிவாகமங்களின் அடிப்படையில் நிகழ்த்தப்பெறும் ஆன்மார்த்த, பரார்த்தக் கிரியைகளில் பல்வேறு முத்திரைகள் காண்பிக்கப்படுகின்றன. கை விரல்களினால் காட்டப்பெறும் இம் முத்திரைகள் இறைவனை மகிழ்விக்கச் செய்வதுடன், சாதகன் மன ஒருமைப்பாட்டுடன் கிரியைகளில் ஈடுபடவும் உதவுகின்றன. கிரியைகளை அர்த்தமுள்ளதாக்கி இறைவனுக்கும் அடியவருக்கும் இடையில் ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்தவும் முத்திரைகள் பயன்படுகின்றன எனலாம்.

வழிபாடு என்பது மனம், வாக்கு, காயம் (மனம், மொழி, மெய்) என்னும் திரிகரணங்களும் ஒன்றிய நிலையில் செய்யப்பட வேண்டும். இதற்கு வழிகோலுபவைதான் ஆலயங்களும் கிரியைகளும்.

மந்திரம், பாவனை, கிரியை எனக் கூறுவதற்கிணங்க, வாக்கினால் மந்திரங்களை உச்சரித்தவாறு கைகளினால் கிரியைகளைச் செய்கையில் மனத்தினால் பாவனை செய்தல் அவசியம். இந்த பாவனை என்பது கிரியைகளைச் செய்யும் சிவாச்சாரியாரிடமும் அவற்றைத் தரிசிக்கும் மற்றும் அடியவர்களிடமும் ஒரே நேரத்தில் தோற்றுவிக்கப்படுவதற்கு முத்திரைகள் துணை செய்கின்றன.

ஒரு நாட்டிய நங்கை அபிநயம் பிடிக்கும்போது தனது உள்ளக் கருத்தை அப்படியே கற்பனைகளை வடிவமைத்துக் காட்டுவதுபோலத் தன் கைகளின்மூலம் சில முத்திரைகளைக் காட்டுவதைக் காண்கிறோம். அதேபோல சிவாச்சாரியாரும் தமது உள்ளக்கருத்தை முத்திரைகளின்மூலம் வெளிப்படுத்தும்போது அது அடியவர்களிடமும் பக்திபாவத்தை ஒருமைப்பாட்டையும் தோற்றுவிக்க உதவுகிறது.

இம்முத்திரைகள்மூலம் எம்பெருமானை மகிழ்விக்கலாம் – அருளைப் பெறலாம் என்பது சிவாகம விளக்கமாகும். முத்திரை என்ற சொல்லிற்கு மகிழ்விப்பது என்ற பொருள் உண்டு.

"மோதனாத் ஸர்வ தேவானாம் த்ராவணாத் பாபஸந்ததே
தஸ்மாத் முத்ரேதி வை க்யாதா ஸர்வ காமார்த்த ஸாதனீ"

" எல்லாத் தேவர்களையும் மகிழ்விப்பதாலும், பாவத் தொடர்பைப் போக்குவதாலும் முத்திரை என்று சொல்லப்படுகிறது. அது எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றி, சகல செல்வங்களையும் தர வல்லது " என முத்திரை பற்றி சாஸ்திர நூல் இயம்புகின்றது.

"அர்ச்சனை, ஜபம், தியானம் முதலியவற்றிலும் காமிய கர்மங்களிலும் ஸ்நானம், ஆவாஹனம், பிரதிஷ்டை, நைவேத்யம் முதலிய பல்வேறு கிரியைகளிலும் அந்தந்த நூல்களிற் கூறப்பட்ட முத்திரைகளை உரிய ஸ்தானங்களில் உரிய முறைப்படி காட்ட வேண்டும்" என்பதும் சாஸ்திர விதியாகும்.

கிரியைகளில் இடம்பெறும் முக்கியமான அங்கம், உபசாரம் ஆகும். கும்பத்திலோ திருவுருவத்திலோ ஆவாஹனம் செய்யப்பட்டு எழுந்தருளியிருக்கும் இறைவனை நாம் தூபம், தீபம், நைவேத்தியம் முதலிய பல்வேறு வகையான உபசாரங்களால் மகிழ்விக்கிறோம். இவ்வகை உபசாரங்களை நாம் இறைவனிடம் சமர்ப்பித்தற்கு முத்திரைகள் வேண்டப்படுகிறது.

சிவாகமங்களிலும் அவற்றின் வழிவந்த பத்ததி நூல்களிலும் சொல்லப்பட்ட முத்திரைகளிற் சந்தியாவந்தனம், சிவபூஜை முதலிய ஆன்மார்த்தக் கிரியைகளிலும், பரார்த்தக் கிரியைகளிலும் பயன்படும் முத்திரைகள் பற்றிய விபரங்களை அறியலாம்.

முத்திரைகளின் நோக்கம், அவற்றின் பொருள் என்பவற்றையும் புரிந்துகொண்டு அவற்றைச் சரியாகக் காட்டும் முறைகளையும் தெரிந்துகொண்டு பயன்படுத்தும்போது அடியார்களும் பெரும்பேறடையக் கூடியதாயிருக்கும்.

"முதம் குர்வந்தி இதி முத்ரா"
(மகிழ்ச்சியைக் கொடுப்பதால் முத்திரை எனப்படுகிறது)
மோதனாத் த்ராவணாத் சைவ முத்ரேயம் ஸம்ப்ரகீர்த்திதா
(மகிழ்ச்சியைக் கொடுப்பதால் முத்திரை எனப்படுகிறது. – பூர்வ காரணம்)

"முதம் குர்வந்தி தேவானாம் மனாம்ஸி த்ராவயந்தி ச
முத்ரா: ஸம்ஸ்ம்ருதா தாஸ் ஸர்வேஷாம் தேவ ஸம்பூஜனே"
(முத்திரைகள் தேவர்களை மகிழ்விக்கின்றன; அசுரர்களை விரட்டி அடிக்கின்றன. – காமிகாகமம்.)

"முத்ராபிர் யேன துஷ்யந்தி முத்ரா இதி ப்ரகீர்த்திதா:"
(முக்கியமாக பூஜை வழிபாட்டிலும் முத்திரைகளால் தேவர்கள் மகிழ்கின்றனர். – யோகஜாகமம்)

"முத்ராவிநா மந்த்ரஜப: ப்ராணாயாம: ஸுரார்ச்சனம்
யோகோ த்யானாஸனஞ் சைவ நிஷ்பலானி து வை யதா"
(முத்திரைகளின்றிப் பிராணாயாமம், ஜபம், தேவபூஜை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடானம். போகம் எது செய்தாலும் அதைச் செய்வது பயனற்றவை – அவனிகா ஞானம்.)

இவையெல்லாம் முத்திரைகளின் சிறப்புக்கள் பற்றிப் பல்வேறு சாஸ்திரங்கள் புகழ்ந்துரைக்கும் செய்திகளாகும்.

முத்திரைகள் காட்டப் பயன்படும் கைவிரல்கள் மகிமை வாய்ந்தவை. அவற்றின் பெயர்களையும் அவற்றின் ஆதிபத்தியத்தையும் பார்க்கும்போது இது விளங்குகிறது.

முதலில் இருப்பது கட்டை விரல். அது அங்குஷ்டம் எனப்படும். அடுத்தது ஆள்காட்டி விரல். அது தர்ஜனி எனப்படும். மூன்றாவது நடுவிரல் – மத்யமா. நான்காவது மோதிர விரல் – அநாமிகா. ஐந்தாவது சுண்டுவிரல் – கனிஷ்டிகா.

கைவிரல்களை மூடிக்கொண்டால் உண்டாகுவது கைமுட்டி. திறந்துகொண்டால் கைத்தலம். இதன் பின்புறம் கரப்ருஷ்டம்.

சுண்டு விரலுக்குக் கீழேயும் விரல் நுனிகளிலும் தேவ தீர்த்தம் உண்டு. ஆள்காட்டி விரல், கட்டை விரல்களுக்கிடையில் பித்ரு தீர்த்தம் உண்டு. நுனி விரல்களால் தீர்த்தம் இறைக்கும்போது – தர்ப்பணம் செய்தல் – தேவர்கள் திருப்தியடைகின்றனர். கட்டை விரல், ஆள்காட்டி விரல்களுக்கிடையால் இறைக்கும்போது பிதிர்கள் திருப்தியடைகின்றனர். உள்ளங்கையின் ஆரம்பத்தில் ஆத்ம தீர்த்தம் உண்டு. அதனால்தான் அப்பகுதியால் ஆசமனம் (மந்திரம் கூறி சிறிது நீர் அருந்தி ஆத்ம சுத்தி பெறுதல்) செய்கிறோம்.

சுண்டு விரலில் பூமி தத்துவமும் மோதிர விரலில் ஜல தத்துவமும், நடுவிரலில் அக்னி தத்துவமும், ஆள்காட்டி விரலில் வாயு தத்துவமும், கட்டை விரலில் ஆகாய தத்துவமும் அடங்கியுள்ளன. "அண்டத்திலுள்ளது பிண்டத்தில்" என்ற தத்துவப்படி பிரபஞ்சத்தின் அடிப்படைகளாகிய பஞ்ச பூதங்களையும் நாம் இவ்வாறு நமது கைவிரல்களுக்குள் காண்கிறோம்.

நமது சமயக் கிரியைகளில் மந்திரங்களுக்குள்ள முக்கியத்துவத்தை நம்மால் உணர முடிகிறது. அவற்றின் ஓசை, அதிர்வு, ஆகியவற்றின் சிறப்பைத் தெரிந்துகொண்டு அவற்றின் பொருளையும் தெரிந்து புரிந்துகொள்ள முயற்சிக்கிறோம். அதே போன்று கிரியைகளிற் காட்டப்படும் பேசா மொழிகள், முத்திரைகள் ஆகும். அவற்றின் அர்த்தங்களைப் புரிந்துகொள்ளும்போது அவற்றின் முக்கியத்துவம் தெரியும்.

நமது வீட்டிற்கு வரும் விருந்தினரை நாம் அன்போடு வரவேற்று உபசரித்து அவரை மகிழ்விக்கிறோம். அவர் மகிழும்போது நாமும் ஆத்ம திருப்தியடைகிறோம். அதுபோல, வழிபாட்டின்போது நாம் வழிபடுகின்ற இறைவனையும் வரவேற்று உபசரித்து மகிழ்கின்றோம். இத்தகைய உபசாரங்களை இராஜோபசாரம், தேவோபசாரம் எனக் கூறுகின்றோம்.

விருந்தினர் வரும்போது "வாருங்கள், வாருங்கள்" என அழைக்கும் வார்த்தைகள் அவரை மகிழ்விக்கும் மந்திரங்கள். அவ்வேளையில் நாம் நமது முகத்தில் காட்டும் மகிழ்ச்சிக்குறி பாவனை அவருக்கு ஆசனம் ஒன்றை அருகே போட்டு அவரை உட்காரச் செய்தல் கிரியை. இவ்வாறு இணையும்போது வரவேற்பு உபசாரம் முழுமை பெறுகிறது. முகத்தில் காட்டும் மகிழ்ச்சிக் குறிப்பும் அமரச் செய்யும் கிரியை ஆகிய மௌன முறையும் இணையும் பகுதியாக அமைவனவே முத்திரைகள்.


சில முக்கிய முத்திரைகளைப்பற்றிச் சிறிது நோக்குவோம்.

## நமஸ்கார முத்திரை



பொதுவாக வணக்கம் செலுத்துவதற்குப் பயன்படுவது இம் முத்திரை. கிரியைகளின் ஆரம்பத்தில் விநாயக வணக்கம் குருவந்தனம் என்பவற்றோடு வேறு தெய்வங்களையும் மனத்தில் நிறுத்தி வணங்குவதற்கு உதவுகின்றது. பக்தி மரியாதையை வெளிப்படுத்த இம் முத்திரை உதவுகின்றது.

பஞ்சாசனம், பஞ்சாவரண பூஜையின் முதலாவது ஆவரண பூஜை நிறைவுற்றதும் இரண்டாவது ஆவரண பூஜைக்குமுன் இடம்பெறும் முத்திரைகளில் நமஸ்கார முத்திரையும் இடம்பெறுவது கவனிக்கத்தக்கது.




## மிருகி முத்திரை

கிரியைகள் ஆரம்பமாகும் வேளையில் விநாயகரை வணங்குதல் முதலியன இடம்பெறுகிறது. அவ்வேளையிற் பயன்படுவது மிருகி முத்திரை. இங்கு இருகைகளும் ஒருங்குசேர்க்கப்பட்டு மிருகி முத்திரை பயன்படுகிறது.




தனியாக வலக்கையினால் மட்டும் இம்முத்திரை காட்டப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. உதாரணமாக, சோம சோபனா பூஜையிற் பலிப்பூசையும் எனப்படும் நிருதி சமர்ப்பிக்கும் வேளையிலும் காலையில் பஞ்ச தீபங்கள் காட்டும்போதும் மிருகி முத்திரை பயன்படுகிறது. ஹோமங்கள் செய்யப்படும்போது சில பொருட்களை மிருகி முத்திரையால் அக்னிக்கு வழங்கவேண்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவாகனை முத்திரை**
இறைவனை எழுந்தருளும்படி வேண்டுதல்



**சந்நிரோதன முத்திரை**
எப்போதும் அங்கேயே நிலைபெற்றிருக்க வேண்டுதல்.




**ஸ்தாபன முத்திரை**
இறைவனை எழுந்தருளியவாறு நிலைபெற்றிருக்க வேண்டுதல்.




**சோடிகை முத்திரை (திக்பந்தனம்)**
காவலுக்காக அக்கினிப் பிரகாசத்தைப் பாவனை செய்தல்.



**சந்நிதான முத்திரை**
இறைவனை அங்கேயே இருந்து அருள்செய்ய வேண்டுதல்.




**அவகுண்டன முத்திரை**
வெளியிலுள்ள தீய சக்திகள் வாராதபடி சிவசக்தியைச் சுற்றி மூன்று மதில்களும் மூன்று அகழிகளும் உள்ளதாகப் பாவனை செய்தல்.



**தேனு முத்திரை (சுரபி முத்திரை)**
பசுவின் மடியிலிருந்து சொரியும் பால் நனைக்கப்பட்டுத் தூய்மை பெறுவதாகிய பாவனை.





இவ்வாறு முத்திரைகள் பேசும் மௌன மொழிகளின் பொருளை உணர்ந்தால் அவற்றைக் காண்பிக்கும் குருவும் அவற்றைப் பார்க்கும் பக்தரும் அவற்றால் அழைக்கப்படும் இறைவனும் ஒருங்கிணைதல் என்னும் பேரின்ப நிலையைப் பெறுதல் கைகூடும்.

அன்பும் இரக்கமும் ஒருவனது பண்பைத் தீர்மானிக்கின்றன. பள்ளிப் படிப்பும் புத்திக்கூர்மையும் உன்னைப் பண்படுத்துவதற்கு உதவமாட்டா. எவ்வளவுதான் நீ உதவியாயிருக்கலாம். உயிர்களிடத்து அன்பும், கருணையும் தூய வாழ்வும் அமைதியும் உன்னிடத்தில் அமையுமானால் அன்னை பராசக்தி உன்னைக்கொண்டு பல அற்புதங்களை நிகழ்த்துவாள். அப்படிப்பட்ட நீ எல்லா நன்மைகளையும் அடைவாய்.

"அன்னை பராசக்தி உருக்குலைந்த உன்னை உருவாக்குகின்றாள்."

— சுவாமி துரியானந்தர் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்திற் புராண படனம்

சிவத்தமிழ்ச் சொல்லழகர் ச. லலீசன் M.A.,M.Edu.

ஈழத்தில் புராணபடன மரபுக்குச் சிறப்பான இடம் இருந்திருக்கின்றது. இம்மரபு ஈழத்திற்கே தனித்துவமானது என்ற நிலையில் எப்பாடுபட்டேனும் இம்மரபைப் பேணிக்கொள்ள வேண்டும் என முற்படும் பலர் நம்மிடையே உளர். இம்மரபின் இன்றைய நிலை குறித்தும் அதன் மேம்பாட்டுக்கான வழி குறித்தும் வாதிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஈழத்தில் புராண படன மரபிற்குக் கால் கோளிட்டவர் என்ற பெருமை, இந்தியாவின் காஞ்சியில் இருந்து 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கந்த புராணத்தை இங்கு எடுத்துவந்து அறிமுகம் செய்த கச்சிக் கணேசையர் என்பவரையே சாரும். அரியாலையில் உள்ள சித்தி விநாயகர் ஆலயத்திலேயே முதன்முதலாகப் புராணப்படிப்பு இடம்பெற்றது எனப் பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம் குறிப்பிடுகின்றார்.

எமது பண்பாட்டில் பெண்கள் கல்வி அறிவு பெறுவதற்குக் கோவிலை மையப்படுத்திய புராணபடன மரபே துணைசெய்தது. கோவில்கள் தவிர மடங்கள், தொழிலகங்கள் (சுருட்டுத் தொழிலகம்) எனச் சைவாபிமானிகள் ஒன்றுசேரும் இடங்களி லெல்லாம் புராணங்களைப் படித்துப் பயன்சொல்லும் இரசனை மரபு நிலவி வந்திருக்கிறது.

சென்ற நூற்றாண்டின் பிற்கூறில் இருந்து புராண படன இரசனை மரபில் ஒரு தொய்வு நிலை ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. உலக மயமாக்கல் – அதன் விளைவாக ஏற்பட்டுள்ள நேரமுகாமைச் சிக்கல்கள் எத்துறையிலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. நாவல்களை இரசிப்போரைவிட சிறுகதைகளை அவற்றையும் விடக் குறுங்கதைகளை நாடுவோருடைய எண்ணிக்கையே அதிகமாகவுள்ளது. நாட் கணக்கில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியை இரசித்த நிலை மாறி இன்று இருபதுக்கு இருபது என்ற குறுகிய நேர அளவிலான கிரிக்கெட் போட்டியே பிரபலம் பெற்று விளங்குகின்றது.

**சைவசமயத் தத்துவங்களையும், நல்வாழ்வுக்குத் தேவையான அறிவுரைகளையும் சாதாரண மக்களுக்கு விளக்கிக் கூறும் பெரும்பணியை, கோவில்களில் முன்னர் ஒழுங்காக நடைபெற்ற புராணபடன நிகழ்ச்சிகள் செய்தன. கடந்த பல ஆண்டுகளாக இந்த நிகழ்ச்சிகளில் ஏற்பட்டுவரும் தொய்வை வருத்தத்துடன் குறிப்பிடும் கட்டுரையாசிரியர் அவற்றில் மக்களின் ஆர்வத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்குத் துணைசெய்யக்கூடிய சில வழிகளைக் கூறவும் தவறவில்லை.**

ஒல்லாந்தருடைய காலத்தில் இருபாலைச் சேனாதிராச முதலியார் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் புராணப் பிரசங்க மரபை ஆரம்பித்து வைத்தார் என வித்துவான் சி. கணேசையர் குறிப்பிடுகின்றார். இந்த வகையில் ஆறுமுகநாவலர், வித்துவசிரோண்மணி வி. பொன்னம்பலபிள்ளை உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை உள்ளிட்ட பல தமிழறிஞர் பாரம்பரியத்தின் ஊடாகப் புராண படன மரபு பேணப்பட்டு வந்துள்ளது.

கந்தபுராணம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பனவே பிரபலமாகப் படிக்கப்பட்டுப் பயன்கொள்ளப்படும் புராணங்களாக உள்ளன.

புராணம் ஒன்றிற்குப் பொருள் விதந்துரைக்கும் நிகழ்வைப் பயன்சொல்லல் என்றே அழைத்தனர். இது குறித்துப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா குறிப்பிடும்போது " சாதாரண பொதுமக்கள் புராணத்தைக் கேட்டுப் பயன்பெறுவது செய்யுளாலன்றி உரையாலேயே நிகழ்ந்துள்ளது. எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்குச் சமயச் செய்திகளையும் அறிவுபதேசங்களையும் கொண்டு செல்லும் சிறந்த ஊடகமாகப் புராண படனம் பயன்பட்டது. அதனாலேயே உரை கூறுவதைப் பயன்சொல்லுதல் என்று அழைத்திருத்தல் வேண்டும்" என்கிறார்.

இந்தப் பகைப்புலத்தில் எமது புராணபடன நிகழ்வை நிறுத்திப் பார்ப்போமானால் அது தன் செல்வாக்கை இழந்துவிடுதல் தவிர்க்க இயலாதது. ஆயினும் ஈழத்திற்குத் தனித்துவமான இம்மரபு தேய்ந்துவிடுவது ஆரோக்கியமானதா? என்பதை எண்ணும்போது ஆழ்மனம் வலிக்கிறது.

பல ஆலயங்களில் புராண படன நிகழ்வே இடம்பெறுவதில்லை. அவ்வாறு இடம்பெறும் ஆலயங்கள் பலவற்றுடனும் இந்நிகழ்வில் பங்கேற்போர் யாரெனப் பார்த்தால் படிப்பவரும் பயன் உரைப்பவருமாகவே உள்ளனர். இந்தக் கசப்பான யதார்த்தத்தை அனைவரும் அறிவர்.

இந்நிலைமைக்கான காரணங்களை ஆராய முற்படின் புராணத்தைப் படிப்பவர், பயன் உரைப்பவர், படிக்கப்படும் காலம், ஆலய முகாமை எனப் பல தளங்களில் ஆராய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அது இக்கட்டுரையை விரிவாக்கிவிடும் என அஞ்சி அவை பற்றிக் கட்டுரையாளர் விரித்துரைப்பதைத் தவிர்த்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌராணிக மரபில் இன்று புராணத்தைப் படிப்பவரும் பயன் உரைப்பவரும் தமது செயற்பாட்டைக் கவர்ச்சிகரமானதாக, இரசனையூட்டக்கூடியதாக மேற்கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டே பலமானதாகக் காணப்படுகின்றது. முற்காலங்களில் உரைகாரர் குருபாரம்பரியம் எடுத்து வைத்துக்கொண்டு பல்வேறு நூல்களில் இருந்து மேற்கோள்களைக் காட்டி உரையைச் சுவைபடக் கூறுவர். ஆனால் இன்று பெரும்பாலான உரைகாரர்கள் உரையிலுள்ள நூல்களை அப்படியே பார்த்து வாசித்துவிடும் வழக்கத்தையே கொண்டிருக்கின்றனர். விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில உரைகாரரே தமது மொழி வளத்தைக் கையாண்டு உரை கூறுகின்றனர்.

ஆலயக் குருமார் காப்புச் செய்யுள் படிப்பதோடு தங்கள் கடமை முடிந்துவிட்டதாக வெளியேறி விடுகின்றனர். இக்கருத்துக்கு விதிவிலக்கானவர்களும் உண்டு. ஸ்ரீ வேவிக் கந்தசுவாமி கோவிலில் ஆலய பிரதம குருவாக விளங்கிய அமரர் சுவாமிநாத இராசேந்திரக் குருக்களே பிரதம உரைகாரராக அண்மைக் காலம்வரை விளங்கியவர்கள். ஆலய அடியவர்களும் காப்புச் செய்யுள் படித்து முடிந்த கையோடு தத்தம் வேலைகளுக்குச் சென்றுவிடுகின்றனர்.

பொருளாதாரக் காரணிகளாலும், இயலாமையினாலும், வேறு பொழுதுபோக்குச் சாதனங்களின் பெருக்கத்தினாலும் புராணபடன நிகழ்வில் கலந்து பயன்கொள்ளும் அடியவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவு அல்லது இல்லை என்ற நிலை எதிர்நோக்கப்படுகின்றது.

எமது ஆலய வழமைகளில் பௌராணிகர்கள் கௌரவிக்கப்படும் சந்தர்ப்பங்களும் அரிதாகவே இடம்பெறுகின்றன. சாதாரண குடும்ப, பொருளாதாரச் சூழலுக்குள் அகப்பட்டிருக்கும் இவர்களால் புராணபடனச் செயற்பாட்டிற்கென மாதக் கணக்கில் அதிக நேரத்தை ஒதுக்குவது பொருளாதார நிலையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

“நல்லன பிழைத்தலும் தகாதன அழிதலும்” என்ற கூர்ப்புக் கொள்கை உயிரிகளுக்கு மாத்திரமல்ல உலகிலுள்ள சமூகச் செயற்பாடுகளிலும் பொருத்திப் பார்க்கத்தக்கது. இந்நிலையில் வழக்கிலுள்ள புராண படன மரபின் பேணுகைக்காக ஆலயம் செய்ய வேண்டிய கடப்பாடு சமய ஆர்வலர்களைச் சார்ந்துநிற்கின்றது.

எமது சமயச் செயற்பாடுகளை ஒரு குடைக்கீழ் ஒருங்கிணைக்கும் வல்லமை எமது சமயத்தில் இல்லாதிருப்பது எமது சமயத்தின் பலமெனவும் பார்க்கப்படலாம். பலவீனமெனவும் பார்க்கப்படலாம். எவ்வாறு பலமாகும் என நோக்கின் – வேண்டியவர் வேண்டியவாறு வழிபட அனுமதிக்கும் சுதந்திரத் தன்மை எமது சமயத்திலேயே உள்ளது. ஆனால் ஒருகுடைக்கீழ் அணி திரளவேண்டிய சந்தர்ப்பங்களில் பலவீனமான நமது இருப்பையே வெளிப்படுத்துகிறது.

புராணபடன விற்பன்னர்களின் உதவியுடன் இத்துறை சார்ந்த ஆர்வலர்களுக்குப் புராணத்தைக் கற்றுக்கொடுப்பதே காலச்சிறந்த திருப்பணியாக அமையும். வளர் இளம் சந்ததியினரை இச் செயற்பாட்டில் இணைத்துக்கொள்வதே இங்கு அதிக முக்கியத்துவமுடையது.

ஆலயப் பொறுப்பாளர், திருமுறை பாராயணம், புராண படனம் முதலிய செயற்பாடுகளில் இளையோரை அதிகம் காண முடிவதில்லை. இவர்கள் வருகிறார்களில்லை என அவர்களும் அவர்கள் விடுகிறார்களில்லை என இவர்களும் மாறி மாறிக் குற்றஞ்சாட்டும் நிலைமையும் உள்ளது.

நம்மிடையே செயற்படுகின்ற அறநெறிப் பாடசாலைகளூடாக இத்திறத்தொன்று பயிற்றுவிக்கப்படலாம். பௌராணிகர்களுக்கு உரிய கௌரவம், சன்மானம் வழங்கப்படுவதால் இத்துறை சார்ந்த புத்தெழுச்சிக்கு வித்திடலாம்.

புராணம் முழுவதையும் கட்டாயம் படித்துமுடித்துவிட வேண்டும் என்றில்லாமல் குறித்த இரசனைக்குரிய பகுதிகளை மட்டும் தெரிவுசெய்து குறித்த நோக்கிலமைந்த படிப்பும் இத்துறை சார்ந்த வளர்ச்சிக்குத் துணை செய்யும்.

உரை மரபுடன் தொடர்புபட்டதாகவே புராணத்துடன் தொடர்புடைய கதாகாலட்சேபம், சொற்பொழிவு என்பன வளர்ந்தன. ஆயினும் இத்துறைகளும் இன்று பல சவால்களை எதிர்கொள்கின்றன.

இவ்விடயத்தில் புராண படனம் பற்றிய விழிப்புணர்வை மேற்கொள்ளாது விடுவோமாயின் “முன்னொருகாலத்தில்...” எனத் தொடங்கும் வரலாற்றுப் பெருமைகள் வரிசையில் இக் கலையையும் சேர்த்து அது பற்றிய ஆய்வு செய்வதோடு நிற்கும் நிலை தவிர்க்க முடியாததாகிவிடும்.


வரலாற்றுச் சிறப்பு மிகு நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் உயர்திருவிழா கடந்த 12.06.2010 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. எதிர் வரும் 25.06.2010 வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், அடுத்த தினம் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

“அமுதசுரபி” அன்னதான சபையினர் உற்சவ தினங்களில் அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு மாகேஸ்வர பூசை செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் சிறந்த முறையில் மேற்கொண்டுள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்




ஊருலகம் வந்தே உவந்து வடம்பிடிக்கத்
தேரிவரும் சீர்நயினைத் தேனமுதே - பாரிலுளோர்
நாளும் நயந்தேத்தும் நற்றாயே நம்மவர்கள்
வாழவழி காட்டிடவே வா.






அலைகடலின் மடியினிலே அழகுருவா
யருள்வடிவா யமர்ந்தே நாளும்
அலையலையாய் வருமடியார் அவலமெலா
மகற்றியருள் பொழியுந் தாயே !
சிலையுருவில் அரவமுடன் தெரிந்திணைந்தே
செகம் முழுதும் புரக்குஞ் செல்வீ
நலமொளிருந் தலப்பெயராம் நயினைவளர்
நாயகியே நாகம்மாளே !

பிள்ளையெனும் பெருமானாம் பிறைநுதலான்
பெருமையுடன் வலத்தே நிற்க
வள்ளிமண வாளனுந் தன் வாகனத்தி
லேறியிடப் புறத்தே செல்ல
வெள்ளி மணிப் பீடந்தனில் மேனி ஒளி
வீசிவரும் உனையே வேண்டித்
தேள்ளுதமிழ்ப் பாக்களினைச் சிந்தைகனிந்
தோதுவர்க்குன் னருள் செய் வாயே.





பெருங்குறை என்று பல் பேர்களின் பேச்சினாற்
பித்தராய் மாறி நெஞ்சம்
வருந்திடும் அடியவர் மனங்களில் அமர்ந்தவர்
மாசெலாம் போக்குந் தேவீ
அருளெனும் அமுதையும் அன்னமாம் அமுதையும்
அடியவர்க் கூட்டு மன்னாய்
திருவளர் பதியெனும் நயினை நின் றருள் செயும்
தேவியே சரணம் அம்மா.

-சிற்பி-

## தியானத்திற்கு ஏற்ற இடம்

யோகமார்க்கத்தில் ஈடுபடுபவர்களுக்கு தகுந்த சூழ்நிலையை நயினாதீவு அம்மன் ஆலய வீதி ஏற்படுத்துகிறது. பூரணை தினத்தன்று அமைதியான இரவு நேரத்தில் இராஜகோபுரத்தின் கீழ் அமர்ந்து தியானத்தில் ஈடுபடும் ஒருவர் பயங்கரமானதொரு தெய்வ சக்தி தம்முள் இறங்குவதை உணர்வார். அச் சக்தி எம்மைப் பயங்கொள்ளச் செய்வதற்கு எம்மிலுள்ள குறைபாடுகளே காரணம். நானெனும் அகம்பாவத்துடன் செல்லும் மனமானது தெய்வ சாந்நித்தியத்துடன் சம்மதப்படும்போது இவ் அதிர்ச்சியை நாம் அடைகிறோம். இது "நான்" எனும் மமதையை ஈடாடச் செய்வதற்கே ஏற்படுகிறது.

05.06.1959 வீரகேசரியில் "சாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம்

திரு த.மனோகரன்

[illegible]

உலகிலுள்ள ஆதி முதற் கோயில், சுயம்புலிங்கம் என்று கூறத்தக்க சிறப்புகள் கொண்ட இந்துக் கோயில்களில் நமது நாட்டின் திருகோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரமும் ஒன்று. வரலாற்றுத் தொன்மைச் சிறப்பும் கொண்ட இச்சிவன் கோயிலின் புனிதத் தன்மை காக்கப்பட வேண்டும் என்று குரலெழுப்பும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளமை வேதனைக்குரியது. திருக்கோணேஸ்வரத்தினது மட்டுமல்ல திருக்கோணமலை கன்னியாவிலுள்ள இந்துக்கள் புனிதமாகப் போற்றும் வெந்நீரூற்றுக் கிணறுகளின் புனிதத் தன்மையையும் காக்க வேண்டுமென்று குரலெழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

திருக்கோணேஸ்வர ஆலயத்தையும் கன்னியா வெந்நீரூற்றுக் கிணறுகளையும் இன்று உல்லாசப் பயணிகளுக்குரிய இடங்களாக கொள்ளும் நிலைக்கு பலர் வந்துள்ளனர். இந்நிலை தடுக்கப்பட வேண்டும்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட இதிகாச காலமான இராமாயண காலத்திற்கு முற்பட்ட தொன்மையை பெறுவது இரு இந்துக்களின் புனித தலங்களுள் கொண்டாடப்படும் தெய்வங்களைச் என்ற சிறப்பு திருக்கோணேஸ்வரத்துக்கு உள்ளது. கி.மு.1300 ஆண்டுகளுக்கு முன் அதாவது இன்றைக்கு 3310 ஆண்டுகளுக்கு முன் இலங்கையை ஆட்சி செய்த மனுமாணிகராஜா என்ற இந்துத் தமிழ் மன்னனால் திருப்பணி செய்யப்பட்டதென்ற வரலாறு கொண்ட திருக்கோணேஸ்வரத்தை புத்தபகவான் அவதரித்த காலத்தில் அதாவது இன்றைக்கு 2554 ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு வந்த விஜயனுடன் வந்த உபதிஸ்ஸன் என்ற பிராமணன் சென்று வழிபட்டதாக சிங்கள, பௌத்த நூல்களால் எழுதப்பட்ட மகாவம்சத்தில் பதிவுகளுள்ளன.

குறிப்பிட்ட காலங்களுக்கு முற்பட்ட இராமாயண காலத்தில் இராவணனால் வழிபாடு செய்யப்பட்ட பெருமை திருக்கோணேஸ்வர சிவாலயத்திற்குள்ளது போன்று கன்னியாவில் இராவணன் தனது தாயாரின் இறுதிக் கடன் செய்த இடமாகப் கொள்ளப்படுகின்றது.

இந்துக்களின் திருக்கோயில்களுக்கு எவ்வளவு சிறப்பளிக்கின்றனரோ அவ்வாறே இறந்த தமது மூதாதையருக்குப் பிதிர்க்கடமை செய்யும் இடங்களையும் புனிதம் நிறைந்ததாகக் கொள்கின்றனர். எனவே, இந்துக்களைப் பொறுத்தவரை திருக்கோணேஸ்வரமும் கன்னியாவும் இந்துக்களின் வழிபாட்டிற்குரிய புனித இடங்கள். இதை இந்துக்களல்லாதோர் புரிந்து கொள்ள வேண்டும்.

புத்த பெருமான் அவதரித்த காலத்துக்கும் நபிபெருமான் அவதரித்த காலத்துக்கும் முற்பட்ட தொன்மை கொண்ட திருக்கோணேஸ்வரத்தின் மீது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் தேவாரத் திருப்பதிகம் பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்துக்களின் வழிபாட்டிடங்கள் புனிதமாகப் பேணப்பட பல விதிமுறைகளுள்ளன. இஸ்லாமியரின் புனித வழிபாட்டுத் தலமான மக்காவிலுள்ள கஃபதுல்லாவிற்கு இஸ்லாமியரல்லாத பிற மதத்தவர்கள் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளமை போன்று அங்குள்ள புனித கல்லைப் பார்க்கக் கூட பிற சமயத்தவர்களுக்கு அனுமதியில்லை. ஏனெனில், அது இஸ்லாமியரின் புனிதத் திருத்தலம். அங்குள்ள விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய கௌரவிக்க வேண்டிய நாகரிகப் பண்பு எவருக்கும் உண்டு.

அதே போல், குறிப்பிட்ட சம்பவங்களைக் கொண்ட காலத்தில் கூடிய சிறப்புப் பெருமையைக் கொண்டதாக இந்துக்கள் திருக்கோணேஸ்வரத்தையும் கன்னியாவையும் கொள்கின்றனர். அதை மதித்து மரியாதை செய்து நடக்க வேண்டிய பொறுப்பு ஏனைய சமயத்தவர்களின் கடமை நாகரிகமும் கூட.

இன்று திருக்கோணேஸ்வரத்தையும் கன்னியாவையும் உல்லாசப் பயணிகளின் இடங்களென்று கூறுவதுடன் பண்பற்ற முறையில் சிலர் நடந்து கொள்கின்றனர். புனிதம் பேண வேண்டிய கன்னியா வெந்நீரூற்றுக்களுக்குப் பாதணிகளுடன் செல்வதும் சவர்க்காரம், சம்போ போன்றவை பாவித்து குளிப்பதும் வெந்நீரூற்றுக் களைப் பரிசீலனை செய்கிறோமென்று தேவையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. சுத்தம் பேண வேண்டிய இடத்தில் குடித்துவிட்டு மாமிச உணவு உண்பதும் அவற்றின் எச்சங்களை அவ்விடத்தில் வீசுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இந்துக்களின் வழிபாட்டுத் தலங்களுக்கு ஆசாரசீலராகச் செல்லவேண்டுமென்பது மரபாகவுள்ளது. ஆகமங்கள் கொண்டவர்கள் செல்வது முற்றாகத் தடையானது. மாமிசம், மது உட்கொண்டவர்கள் இந்துக் கோயில்களுக்குச் செல்வது தடையானது. பாதணிகள் அணிந்து கொண்டு செல்வதும் தடையானது.

இவ்வாறு புனிதம் பேண பல விதிமுறைகள் வகுக்கப்பட்டிருந்தும் திருக்கோணேஸ்வர ஆலயத்தை உல்லாசப் பயணிகளுக்கான இடமாகக் கூறிக்கொண்டு வலிந்து அத்துமீறி செல்லும் நிலை தற்போது உருவாகியுள்ளது.

இதைத் தடுக்க, உரிய விதிமுறைகளை எடுத்துக் கூறி எதிர்ப்புத் தெரிவிக்கும்போது இனவாத, மதவாத கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்துக்கள் மேலும் அவமானங்களை இழிவுபடுத்த முற்படுகின்றனர்.

முன்னாளில் இந்துக்களின் புனிதத்தைப் பேண வகைகொடுத்துப் பேணப்பட்ட இராஜ்ஜியத்தினதும் காலத்துக்கேற்ப மாறும் ஆக்கிரமிப்பைப் பாரம்பரியமாகப் பெற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகின்றது. சிங்களவர்களும் பௌத்தர்களும் இந்துக்களின் வழிபாட்டுத் தளங்களுக்கு வழங்கிவரும் கௌரவத்தை ஏனையவர்களும் வழங்க வேண்டும். இது சமய நல்லிணக்கத்திற்கு மட்டுமல்ல சமூக நல்லிணக்கத்திற்கும் அவசியமானது.

எனவே, திருக்கோணேஸ்வரம் மற்றும் கன்னியா வெந்நீரூற்றுக்கள் என்பவை இந்துக்களின் பாரம்பரிய புனித பிரதேசங்கள் என்பதை அனைவரும் புரிந்து கொண்டு நடப்பதும் ஏனைய சமய, சமூக அமைப்புகளும் அவற்றின் புனிதத் தன்மையைப் பேண தம்மவர்களுக்கு அறிவுரை கூறி வழிகாட்ட வேண்டும்.

தொடர்ந்தும் இந்துக்களின் புனிதத் தலங்களின் பெருமையை, புனிதத்தைச் சிதைக்கும் சக்திகள் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் இந்துக்கள் நிலைமையை மக்கள் முன்வைப்பதிலேயே உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Wish: A School and a Temple on each Road

*Prof.A. Sanmugadas, Ph.D. (Edinburgh)*

The Tamil poet Makakavi Subramaniya Bharathi wished that the sweet sounds of the performing arts should be heard in each house and a street must have at least one or two schools (வீடு தோறும் கலையின் முழக்கம் வீதி தோறும் இரண்டொரு பள்ளி"). Indirectly he advocated an aesthetic education. What is the use of this type of education? The Indian scholarship believed that the learned must go through a learning that is underlined with "Sathyam", "Sivam" and "Sundaram" i.e. education that leads to the understanding of 'truth' (Sathiyam); education leading to God consciousness and education leading to the understanding of beauty and aesthetic feeling. One wonders whether these three have to be leaned independently by three groups of students or each student has to learn all the three branches. Curriculum has to be designed to impart these three to all higher learning students.

Another interpretation is given to the word Beauty: that is whatever the education that you receive has to i prove the inner beauty of a person. What is inner beauty? Hindu sages have said that the ornament of man is his physical form. the ornaments of the form are his inner virtues, and the ornament of his virtues is his knowledge. The ornament of the virtues that he receives from proper education of truth and God consciousness add beauty to a person. Even an ugly person is considered beautiful if he or she has proper education. A Tamil verse explains this beautifully.

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு.

The beauty that comes of one's hair style, attractive clothing and make-up with turmeric elc., is not real beauty. It consists in the inner virtues of goodness and righteousness inculcated by education.

Having made the point that an appropriate education is essential, i would like to let my wish be known here. Bharati wished that the sweet sounds of the performing arts should be heard in each house and a street must have at least one or two schools. What I wish is that each street must have a school and a temple. A school imparts the proper education. That gives the knowledge which is the ornament of virtues. But virtues without the right understanding of life, the knowledge of the goal of life, the discrimination between the good and the bad, bondage and liberation are not going to help us to deliver the proper services to the humanity.

The knowledge that we obtain from a school has to be transformed into gnanam (wisdom). Temple is the place where you will get this. Knowledge is good. Science education that gives you a scientific knowledge has produced a number of comforts to the human beings. It has given us several luxuries that we enjoy in this world. But at the sam time it is the one that has produced number of arms and atomic bombs that are continuously destroying several human beings all over the world. Improper commercial ambitions, unscrupulous diplomatic and political thinking have to be stopped. Only a religious education can achieve this. The proper place for this is the temple.

The Hindu temple gives you an opportunity to fall down at the feet of the Almighty. This has a psychological and physical effect on you. Falling down develops a sense of humility in your mind. There is a saying in Sanskrit "Vidya dadhati vinaya" (Education gives humility). But we know that mere school education is not going to give us that. That is why a temple is needed just by the side of the school. Let us graduate from the school (or the University) and proceed to the Temple to transform the knowledge to gnanam.

*Edited & Published by Mr.S.Shivasaravanabavan on behalf of the Saiva Paripalana Sabai, No.450, K.K.S. Road, Jaffna & Printed at Harikanan Printers, No.424, K.K.S. Road, Jaffna. 15.06.2010 (1st Day of Aniththingal). Phone: 021 222 7678*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org